பக்கங்கள்: பதினெட்டு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆவணி 16 செவ்வாய்க்கிழமை (01.09.2009)UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 279

# ஊடகவியலாளர் திஸநாயகத்துக்கு 20 வருட கடூழியச் சிறைத் தண்டனை

## கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு, செப்ரெம்பர் 01

சிரேஷ்ட ஊடகவியலாளர் ஜே.எஸ்.திஸநாயகத்துக்கு கொழும்பு மேல்நீதிமன்றம் நேற்று இருபது வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

இனங்களுக்கு இடையிலான உணர்வுகளைத் தூண்டி பொதுமக்கள் மத்தியில் கலவரம் ஏற்படுத்தும் விதத்தில் கட்டுரைகளை எழுதி வெளியிட்டார் எனக் குற்றம் சுமத்தி பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மற்றும் அவசரகாலச்சட்டம் ஆகியவற்றின் கீழ் அவருக்கு எதிராக சட்டமா அதிபர் சார்பில் தொடுக்கப்பட்ட வழக்கில் அவரைக் குற்றவாளியாகக் கண்ட மேல்நீதிமன்ற நீதிபதி திபாலி விஜேசுந்தர அம்மையார் இத்தண்டனைத் தீர்ப்பை வழங்கினார். (18 ஆம் பக்கம் பார்க்க)

## திஸநாயகத்துக்கு சர்வதேச விருது!

கொழும்பு, செப்.01

கொழும்பு மேல் நீதிமன்றத்தால் 20 வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் ஊடகவியலாளர் திஸநாயகத்திற்கு 2009ஆம் ஆண்டின் சர்வதேச ஊடக சுதந்திரத்திற்கான விருது வழங்கப்படுகின்றது.

ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பதற்கான அமைப்பு என்கின்ற சர்வதேச ஊடக அமைப்பு இந்த விருதை வழங்குகின்றது.

இவருக்கு இந்த விருது வழங்கப்படுவது குறித்த அறிவித்தல் இம்மாதம் குறித்த (18 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு மேல் நீதிமன்றம் முன் ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டம்



கொழும்பு, செப். 01

ஊடகவியலாளர் திஸநாயகம் நேற்றுக்காலை கொழும்பு மேல் நீதிமன்றத்துக்கு கூட்டிவரப்பட்டவேளையில், நீதிமன்றத்துக்கு முன்பாக, ஊடகவியலாளர்கள் அவரை விடுதலை செய்யக் கோரி ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

'சுதந்திரத்திற்கான மேடை' என்ற அமைப்பினால் இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

5 ஊடக அமைப்புகள், சிவில் சமூக அமைப்பைச் சேர்ந்தவர்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

இதேவேளை, ஊடகவியலாளர் திஸநாயகம் சம்பந்தப்பட்ட நீதிமன்றத் தீர்ப்பை அறிவதற்காக வெளிநாட்டு இராஜதந்திரிகள், மனித உரிமை ஆர்வலர்கள் பலரும் நீதிமன்ற வளாகத்திற்கு முன்பாகத் திரண்டிருந்தனர்.

(அ-சி)

## லிபியாவில் ஜனாதிபதி

கொழும்பு, செப். 01

இரண்டுநாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று அதிகாலை லிபியா சென்றுள்ளார்.

இந்த விஜயத்தின் போது லிபிய ஜனாதிபதி உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்களையும் அவர் சந்திக்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (18 ஆம் பக்கம் பார்க்க)

## 'சனல்-4' வீடியோ போலியானது என்பதை இலங்கை இராணுவம் நிரூபித்துவிட்டதாம்

### சுடுபவர்கள் புலிகள்; சுடப்படுபவர்கள் படைச்சிப்பாய்கள்: உதய நாணயக்கார விளக்கம்

கொழும்பு, செப் 01

இலங்கை இராணுவம் இளைஞர்கள் சிலரை சுட்டுக்கொல்வது போன்று சனல்-4 தொலைக்காட்சி வெளியிட்ட வீடியோ போலியானது என்பது தமது விசாரணைகள் மூலம்தெரியவந்துள்ளதென இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

வீடியோ போலியாகத் தயாரிக்கப்பட்டது என்பதை தாம் நூறுவீதம் உறுதியாக நம்புகிறார் எனத் தெரிவித்துள்ள பிரிகேடியர் உதய நாணயக்கார, விடுதலைப் புலிகளே இதனைச் செய்திருக்கலாம் என்பதற்கான அனைத்து தடயங்களும் புலப்படுகின்றன எனவும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இலங்கை இராணுவத்தின்மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு முரணானது-பிழையானது என்பது பல விதங்களிலும் தெரியவந்துள்ளது எனக் கூறியுள்ள பிரிகேடியர், குறிப்பிட்ட வீடியோவில் இலங்கை இராணுவச் சீருடையில் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டவர் இராணுவச் சின்னங்கள் எதனையும் சூடியிருக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். (18 ஆம் பக்கம் பார்க்க)



## ஜனாதிபதியுடன் 7ஆம் திகதி தமிழ்க் கூட்டமைப்பு பேச்சு

கொழும்பு, செப். 01

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர் மட்டக்குழு ஒன்று எதிர்வரும் திங்கட்கிழமை 7ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்திக்கவுள்ளது எனக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. இதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன என்றும் கூறப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் மூன்று அல்லது நான்கு எம்.பிக்களைக் கொண்ட குழு ஒன்றே ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களைச் (18 ஆம் பக்கம் பார்க்க)

## அகதி முகாம்களில் புலிகளின் செல்வாக்கு அதிகரிப்பாம் அதனால் அகதிகளை சிறுசிறு குழுக்களாக இடமாற்ற ஆலோசனை

கொழும்பு, செப்.01

வவுனியா நலன்புரி முகாம்களில் பொதுமக்களின் மத்தியில் மறைந்துள்ள விடுதலைப்புலிகளின் செல்வாக்கு அதிகரித்துள்ளமையைத் தொடர்ந்து அவர் களை இனங்காண்பதற்காக மக்களைச் சிறிய சிறிய முகாம்களுக்கு மாற்றுவது குறித்து அரசு ஆராய்ந்து வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

புலனாய்வுப் பிரிவினர் இந்த விடயத்தைப் பாதுகாப்பு அமைச்சின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளனர் (18 ஆம் பக்கம் பார்க்க)

## பிள்ளையானின் ரி.எம்.வி.பிக்கு எதிராக அக்கரைப்பற்றில் மக்கள் ஆர்ப்பாட்டம்!

### அலுவலகம் மீது கல்வீச்சு; பொலிஸார் துப்பாக்கிச் சூடு!!

திருக்கோவில், செப். 01

அம்பாறை மாவட்டத்தில் பிள்ளையான் தலைமையிலான தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டம் அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்துக்கு அருகில் அமைந்துள்ள தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி அலுவலகத்துக்கு முன்னால் இடம் பெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கலைந்து செல்லுமாறு (18 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகள் இயக்கம் மீண்டும் புத்துயிர் பெறலாம்

### சர்வதேச புலனாய்வு இணையத் தளம் எதிர்வுகூறல்

கொழும்பு, செப்.01

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இலங்கையில் மீண்டும் புத்துயிர் பெறலாம் என்று 'Strategy Page' என்கிற பிரபல சர்வதேச புலனாய்வு இணையத்தளம் எதிர்வு கூறியுள்ளது.

இலங்கைப் படையினருடனான இறுதி யுத்தத்தில் தப்பிச் (18 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வலி.வடக்கு மக்களின் நிலை குறித்து கவன ஈர்ப்புக் கலந்துரையாடல் ஞாயிறன்று

கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக தங்கள் இருப்பிடங்களை இழந்து அகதிகளாகியுள்ள வலி.வடக்கு மக்களின் நிலை குறித்து அரசியல் தலைவர்கள், அரச அதிகாரிகளை கவனஈர்ப்புச் செய்யும் நோக்குடன் கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு உரும்பிராயில் இயங்கும் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் இந்த நிகழ்வு இடம் பெறவுள்ளது.

இதுதொடர்பாக குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

ஆயிரக்கணக்கான குடும்பங்கள் புனர்வாழ்வு முகாம்களிலும் மாற்றார் வீடுகளிலும் இன்றும் வாழ்ந்து வருகின்றனர். இதே நேரத்தில் வவுனியாவில் தடுப்பு முகாம்களில் இருந்து விடுவிக்கப்படும் வலி. வடக்குக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பலர் வந்து சேர உள்ளனர்.

ஏதிலிகளாக வரும் இத்தகையவர்களை ஏற்றுக்கொள்ள வேண்டிய இங்குள்ள உறவுகள் இருப்பிடங்களை எப்படிக் கொடுப்பது என்று அங்கலாய்க்கின்றனர்.

மேலும் யாரும் நிலங்கொடுக்காதமையினால் ரயில் பாதைகளில் குடியிருக்கும் வலி.வடக்கு மக்களை வெளியேறும்படி மிரட்டல்கள் விடப்பட்டு வருகின்றன.

இந்த நிலைமைகளை உரியவர்களது கவனத்துக்கு கொண்டுவரும் நோக்கோடு நடைபெறவுள்ள மேற்படி கலந்துரையாடலில் குரும்பசிட்டி மக்கள் மட்டுமன்றி பாதிக்கப்பட்டுள்ள ஏனைய கிராம மக்களையும் கலந்துகொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது - என்றுள்ளது. (1)

## உடுவில் மகளிர் கல்லூரிக்கு பதில் அதிபர் நியமனம்

உடுவில் மகளிர் கல்லூரியின் பதில் அதிபராக கலாநிதி செல்வி.சி.வி.செல்லையா நேற்று முதல் நியமிக்கப்பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை நடைபெற்ற தென்னிந்தியத் திருச்சபையின் யாழ்ப்பாணப் பேராயத்தின் நிறைவேற்றுக் குழுவின் கூட்டத்தில் பதில் அதிபராக செல்வி.சி.வி.செல்லையாவை நியமிப்பதென ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக தென்னிந்தியத் திருச்சபையின் யாழ். பேராயர் அதிவண. கலாநிதி டானியல் எஸ். தியாகராசா தெரிவித்தார்.

உடுவில் மகளிர் கல்லூரி ஆளுநர் சபையின் சிபார்சின் பேரில் இந்த நியமனம் இடம் பெற்றுள்ளதாகவும் பேராயர் கூறினார்.

செல்வி சி.வி.செல்லையா மேற்படி கல்லூரியின் முன்னாள் அதிபராகவும், முகாமையாளராகவும் 21 வருடங்கள் பணியாற்றியவர்.

கல்லூரியின் தற்போதைய அதிபரை பணிநீ[illegible] செய்வதென்ற முடிவைத் தொடர்ந்தே [illegible]தில் [illegible]பர் நியமனம் செய்யப்பட்டுள்ளார் என்றும் [illegible] மேலும் கூறினார். (1-111)

# உலகவங்கியின் இலவச தகவல் மையம் யாழ். நூலகத்தில் அடுத்தமாதம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப்.01

உலக வங்கியின் இலவச தகவல் மையம் ஒன்று யாழ். பொதுநூலகத்தில் அடுத்தமாதம் திறக்கப்படவிருக்கிறது.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள உலகவங்கியின் இலங்கைப் பணிப்பாளர் நயாக்கோ இஷி யாழ்.மாநகர சபை அதிகாரிகளுடன் நடத்திய கலந்துரையாடலில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ பிரதம நூலகர் எஸ்.தனபாலசிங்கம் ஆகியோர் இக் கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

யாழ். மாவட்ட மாணவர்களின் கல்வி நிலையை முன்னேற்ற உதவும் வகையில் இந்த மையம் அமைக்கப்படவிருக்கின்றது என்று தெரிவிக்கப்பட்டது.

தற்சமயம் நடைமுறையில் உள்ள கல்வித் திட்டங்களுக்கு அமைவாக இந்த மையத்தின் கல்விச் செயற்பாடுகள் இருக்கும் என்றும் கூறப்பட்டது. (1-120)

# கள்ளர் பயம் காரணமாக கைப்பையில் எடுத்துவந்த நகைகளைக்கூட திருடர்கள் விட்டுவைக்கவில்லை!

## இணுவிலில் தனித்து வந்த பெண்ணிடம் கைவரிசை

இணுவில்,செப்.01

திருமண நிகழ்வு ஒன்றில் கலந்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த பெண், திருடர் பயம் காரணமாக தனது நகைக்களை கழட்டி கைப்பைய்யினுள் வைத்துச் சென்றார். அவரைப் பின் தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் வந்த திருடர்கள் அவரை வழிமறித்து கைப்பையை அபகரித்துக் கொண்டு தப்பி ஓடிவிட்டனர்.

இப்படியான சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் இணுவில் காரைக்கால் பகுதியில் இடம்பெற்றது.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:-

தமது உறவினர் ஒருவரின் திருமண நிகழ்வில் கலந்து கொண்ட பெண்ணொருவர் திருடர் பயம் காரணமாக தாம் அணிந்திருந்த சங்கிலி, மற்றும் அட்டியல் ஆகியவற்றை தமது கைப்பையினுள் வைத்துவிட்டு சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்தார்.

அவரைப் பின் தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் வந்த திருடர்கள் அவரது கைப்பையை அபகரித்துச் சென்றனர்.

அப்பையினுள் நகைகளுடன் அவரின் அடையாள அட்டை, கைத்தொலைபேசி ஒரு தொகைப் பணம் என்பனவும் இருந்ததாகக் கூறப்படுகின்றது. (06-45)


உ
சிவமயம்

# கடைத்திறப்பு விழா அழைப்பு


அன்புடையீர்
நிகழும் மங்களகரமான விரோதி வருஷம் ஆவணி மாதம் 17 ஆம் திகதி நாளை (02.09.2009) புதன்கிழமை பூர்வதிரோயதசித் திதியும், திருவோண நட்சத்திரமும், விருட்சிக இலக்கினமும், அமிர்த சித்த யோகமும் கூடிய மு.ப 09.21 - 10.51 மணி வரையுள்ள நல்வேளையில்



## கிசோனி நகை மாளிகை



என்னும் ஸ்தாபனத்தை பிரதான வீதி, நெல்லியடியில் ஆரம்பிக்கவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து சபையைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.



(HAPPY TEXTILES முன்பாக
ஹப்பி ரெக்ஸ்ரையில்ஸ் முன்பாக)

இங்ஙனம் நல்வரவை நாடும்:
திரு. திருமதி விஜயகுமார்.

(88442)



ஈழத்தின் முன்னணி அரங்க நிறுவனமான செயல் திறன் அரங்க இயக்கம் நடத்தும் இலவசப் பயிற்சிநெறி

சிறுவர் அரங்கிற்கான நாடகத் தயாரிப்பு பயிற்சிநெறி

ஜீ.சி.ஈ உயர்தரப் பரீட்சையைப் பூர்த்தி செய்தவர்கள் விண்ணப்பிக்கலாம்

சிறுவர் நாடகங்கள் தயாரிப்பதில் மற்றும் நடிப்பதில் பயிற்சி வழங்கப்படுவதோடு சிறுவர் நாடக மேடையேற்றங்களிலும் வாய்ப்புக்கள் வழங்கப்படும்

முடிவுத் திகதி - 08.09.2009

தொடர்புகளுக்கு:தொ.பே.: 0602216222

முகவரி : செயல் திறன் அரங்க இயக்கம்,
(பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு முன்பாக)
அருளகம் , ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

(88430)


## இன்றைய ஆட்டம்

வலி.வடக்கு, செப். 01

ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலய திருவிழாவை முன்னிட்டு ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு ஏழுபேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யூனியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு :-

✱ றோயல் விளையாட்டுக்கழகம் எதிர் விளையாட்டு விஞ்ஞான அலகு.

✱ நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழகம் எதிர் [illegible] விளையாட்டுக்கழகம்.(201-86)

# செஞ்சிலுவைச் சங்கப் புலமைப் பரிசில்களுக்கு 30 மாணவர்கள் தெரிவாகியுள்ளனர்

## நாளை சமுகமளிக்க அறிவுறுத்து

யாழ்ப்பாணம், செப். 01

ஜீ. சி. ஈ. (சாதாரண) தரப்பரீட்சையில் சித்தியடைந்து ஜீ.சி.ஈ. (உயர்தர) தர வகுப்பில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு யாழ். செஞ்சிலுவைச் சங்கம் புலமைப்பரிசில்களை வழங்கவிருக் கின்றது.

இந்தப் புலமைப்பரிசில் திட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை பெற்றோர் அல்லது பாதுகாவலருடன் நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கும் பிற் பகல் 4 மணிக்கும் இடையில் சங்கத்தின் தலைமைக்காரியாலயத்துக்கு சமுகமளிக் குமாறு கேட்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களின் விவ்ரம் வருமாறு :-

திருத்திகை சிவலோகநாதன் - வேம்படி மகளிர் கல்லூரி, மதிவதனி சுந்தரலிங்கம் - பெரியபுலம் மகாவித்தியாலயம், துரைராசா சைவதனரூபன் - ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை, மயூரி பத்மநாதன் - வடஇந்து மகளிர் கல்லூரி, வி.வி.விஜிதா - உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, தாரணி பாஸ்கரன் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, குகதாசன் கோபிகா-வேம்படி மகளிர் கல்லூரி, பாலசுப்பிரமணியம் கிரிசா- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம், பவித்திரா செல்வநாதன் - வேம்படி மகளிர் கல்லூரி, சரிதா செல்லத்துரை-யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை, பவிதா பற்பனசிங்கம் - விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம், மாதூரி ஜீவமோகன்- விக்ரோறியா கல்லூரி, சுழிபுரம், கோசலா பத்மநாதன் - விக்ரோறியா கல்லூரி, சுழிபுரம், யோகநாதன் ஜெகன் - சோமஸ்கந்தா கல்லூரி, ஈஸ்வரன் முகுந்தன்- சோமஸ்கந்தா கல்லூரி, பாலச்சந்திரன் ரஜனி-கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, சுந்தரலிங்கம் சாரங்கன் - யூனியன் கல்லூரி, கீர்த்திகா யோகநாதன் - இந்து மகளிர் கல்லூரி, உலந்தா யோசப் - பரிசுத்த கன்னியர்மடம், இரவிசந்திரதாஸ் செந்தூரதாஸ் - மத்திய கல்லூரி, வரதராசா தயாளன்-இந்துக் கல்லூரி, நாகேந்திரா பிரகாஸ்-இந்துக் கல்லூரி, கணநாதன் உசாந்தன்-இந்துக் கல்லூரி, மு.மயூரன் - இந்துக் கல்லூரி, வு.குசேலரமணன் - யூனியன் கல்லூரி, லக்சனா இரவீந்திரநாதன் - அளவெட்டி அருணோதயக் கல்லூரி, முருகநாதன் தனுசா - அருணோதயக் கல்லூரி, லக்சாஜினி குணசீலன் - மகாஜனாக் கல்லூரி,லாவண்யா நகுலேஸ்வரன்-மகாஜனாக் கல்லூரி தெல்லிப்பழை, தரணா முருகையா - மகாஜனாக் கல்லூரி தெல்லிப்பழை. (1)


### விற்பனைக்கு

புத்தம் புதிய U.K. இல் இருந்து கொண்டுவரப்பட்ட LAP TOP கணனி ஒன்று விற்பனைக்கு உண்டு.
TOSHIBA, 3GB RAM,2.0 DUD-CORE PROCESSOR W IRELESS,160GBHDD, WINDOWS VISTA HOME,PREMIUM
விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P 0776624423


# மரண அறிவித்தல்

## அந்தோனிப்பிள்ளை அல்பிறட்



கரம்பன் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கச்சேரி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை அல்பிறட் நேற்று (31.08.2009) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஓவசியர் அந்தோனிப்பிள்ளை - தங்கம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற இம்மானுவேல் (இராஜக்கோன்), அக்கினஸ் (மரியம்மா), மாகிறற் (இராசமணி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான புஸ்பா, சூசைப்பிள்ளை மற்றும் பாக்கியநாதர் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி இன்று பாண்டியன்தாழ்வு அன்னம்மாள் ஆலயத்தில் (01.09.2009) செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.82/8, கச்சேரி கிழக்கு,
ரயில்றோட், யாழ்ப்பாணம்.

தகவல்: மருமகன்
(பாக்கியநாதன் - அன்ரன்).

# மரண அறிவித்தல்

## ஆறுமுகம் ஐயாத்துரை



175/12, கைலாசபிள்ளையார் கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட ஆறுமுகம் ஐயாத்துரை 30.08.2009 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - மீனாட்சி தம்பதியரின் பாசமகனும், இராஜேஸ்வரியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான S.K.பிச்சை - இரெங்கம்மா தம்பதியரின் மருமகனும் சுப்பையா, பழனி, தனபாக்கியம், அமிர்தம், சீதாலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் பாலமுரளி, சுவர்ணகலா, சிவகலா, கிருஷ்ணகலா, ஸ்ரீகிருஷ்ணா, ஜெகநாத், தயாபரன், கார்த்திக், ஹரிதரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் தர்மரூபி, புஸ்பநாதன்,கமலதாசன் ஆகியோரின் மாமனாரும் பிரசன்ணா, பிரஜீனன், கோவி, றஜீ, சாளினி, ஷகானா, கவிந்திகா, தமிஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (02.09.2009) புதன்கிழமை அவரின் இல்லத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

175/12, கைலாசபிள்ளையார் கோயில் வீதி,
நல்லூர்.

தகவல்:
குடும்பத்தினர்.

(அ-560561)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அல்லற்படும் ஊடக சுதந்திரம்

இலங்கையில் ஊடகவியலாளர்களின் நிலைமை எத்தகைய இக்கட்டு, நெருக்கடிக்கு மத்தியில் உள்ளது என்பதை சட்ட ரீதியாகவும் கூட நிரூபிக்கும் உதாரணத்தை சர்வதேசம் தரிசிக்கும் வாய்ப்புக் கிட்டியிருக்கின்றது.

கைது செய்யப்பட்டு நானூற்றியிருபத்தியைந்து நாள்கள் தடுப்புக் காவலிலும், விளக்கமறியலிலும் வைக்கப்பட்டிருந்த ஊடகவியலாளர் ஜே.எஸ். திஸநாயகத்துக்கு இருபது வருடக் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி திபாலி விஜேசுந்தர அம்மையார் நேற்று வழங்கிய தீர்ப்பு ஊடக வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சி அலைகளை உருவாக்கியிருக்கின்றது.

'நோர்த் ஈஸ்டன்' என்ற ஆங்கில மாத சஞ்சிகையில் அவர் எழுதிய கட்டுரைகளுக்காக பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், அவசரகாலச் சட்ட விதிகள் ஆகியவற்றின் கீழ் மூன்று குற்றச்சாட்டுகளில் அவரைக் குற்றவாளியாகக் கண்ட மேல்நீதிமன்றம், அதன் அடிப்படையில் அவருக்கு இருபது ஆண்டு காலச் சிறைத் தண்டனையை விதித்திருக்கின்றது.

கைது செய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த சமயம் அவர் ஒப்பமிட்டார் எனக் கூறப்படும் ஒரு வாக்குமூலமே அவருக்கு எதிரான பிரதான சாட்சியமாகவும், ஆவணமாகவும் இந்த வழக்கில் முன்வைக்கப்பட்டது. தடுப்புக் காவலில் தம்மை அச்சுறுத்தி, மிரட்டி அந்த வாக்குமூலமும், அதில் உள்ள ஒப்பமும் பெறப்பட்டன என திஸநாயகம் சார்பில் கூறப்பட்ட ஆட்சேபணை நிராகரிக்கப்பட்டது. அந்த வாக்குமூலத்தை திஸநாயகம் தமது சுயவிருப்பின் பேரில் இசைந்தே கொடுத்தார் என்ற முடிவுக்கு வந்த மேல்நீதிமன்றம், அதன் அடிப்படையில் அவரைக் குற்றவாளியாகக் கண்டு இத்தீர்ப்பை வழங்கியிருக்கின்றது.

இந்தத் தீர்ப்பு ஊடக சுதந்திரத்துக்காகவும், மனித உரிமைகளுக்காகவும் குரல் எழுப்பும் தரப்புகளுக்கு பேரதிர்ச்சியைத் தந்திருக்கின்றது என்று குறிப்பிடுவதற்கு அப்பால், இத்தீர்ப்பின் நியாய, அநியாய - அல்லது சாதக பாதக - பக்கங்களை ஆராய முற்படுவது நம் தலையிலேயே நாம் மண் அள்ளிக் கொட்டுவதாக அமைந்துவிடக்கூடும்.

ஊடக சுதந்திரத்தின் எல்லை குறித்து, புதிய வரையறைகளைச் செய்து தீர்ப்பளித்திருக்கும் நீதிமன்றம், அத்தீர்ப்பில் புதைந்து கிடக்கும் தார்மீக மற்றும் தார்மீகம் அற்ற விடயங்களைக் கிளறி விமர்சிப்பது குறித்தும் தனக்கு உசிதமான வரையறைகளைச் செய்ய முற்பட்டால் இப்பத்தியின் பொறுப்பாளரும் திஸநாயகத்தின் கதியை அடைய நேரிடுவது தவிர்க்க இயலாததாகிவிடும்.

ஆகவே, கத்தி முனையில் நடப்பது போன்று, கையாளப்பட வேண்டிய இத்தீர்ப்பு விடயத்தின் உள்ளார்ந்த அம்சங்களை, இப்பத்தியில் வசனங்களுக்கு இடையில் - அச்சுக்கு வராமல் புதைந்து கிடக்கும் வாக்கியங்கள் மூலம் - வாசகர்கள் புரிந்து கொள்வதே இன்றைய நிலையில் சாத்தியமானதாகும்.

உலகின் ஊடகவியலாளரின் பணிக்கு மிகவும் ஆபத்தான இடங்களில் பிரதானமானதாக இலங்கை அடையாளம் காணப்பட்டிருக்கின்றது. ஊடகவியலாளர்கள் கடத்தப்படுதல், காணாமற் போகச் செய்யப்படுதல், படுகொலை செய்யப்படுதல், அச்சுறுத்தப்படுதல், மிரட்டி அடக்கப்படுதல் போன்றவை தாராளமாக இடம்பெறும் நாடுகளின் வரிசையிலும் இலங்கைக்கு முக்கிய இடம் உள்ளது.

காணாமற் போனோர் தொடர்பான 26 ஆவது சர்வதேச தினம் நேற்று முன்தினம் உலகம் முழுவதிலும் அனுஷ்டிக்கப்பட்டது. அதை ஒட்டி அறிக்கை ஒன்றை வெளியிட்ட எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு, ஊடகவியலாளர்கள் காணாமற்போகும் விடயத்தினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட நாடுகளின் வரிசையில் மெக்ஸிக்கோவுக்கு அடுத்து இரண்டாவது நிலையில் இலங்கை உள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறு இலங்கையில் கடந்த மூன்றரை ஆண்டுகளில் - தற்போதைய ஆட்சித் தலைமையின் கீழ் நாடு வந்த பின்னர் - ஊடகங்கள், ஊடகவியலாளர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட மோசமான வன்முறைகள், அடக்குமுறைகள், அடாவடித்தனங்கள் தொடர்பில் சூத்திரதாரிகள் யாருமே கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படவேயில்லை என்பது சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

ஒருபுறம், ஊடகங்களின் குரல்வளையை நசுக்கும் விதத்தில் அவற்றுக்கு எதிராகத் திட்டமிடப்பட்ட முறையில் கட்டவிழ்த்து விடப்படும் வன்முறைகள், அடாவடித்தனங்கள் - அவற்றை மேற்கொள்ளும் சூத்திரதாரிகள், குற்றப் பொறுப்பிலிருந்து விலக்களிக்கப்பட்டோர் போல தப்பிச் செல்வதற்கு வாய்ப்பான தாராளப் போக்கு; மெத்தனச் செயற்பாடு.

மறுபுறத்தில் இறுக்கமான சட்டங்கள், நெகிழ்ச்சியற்ற நீதிமுறைமைகள், இரும்புப்பிடி போன்ற நீதிமன்றக் கட்டுக்கோப்புகள் மூலம் ஊடகவியலாளர்களுக்கு எதிராகக் கடும் தீவிர நடவடிக்கைகள்.

இப்படி ஊடகங்களுக்கு எதிராகக் குற்றமிழைப்போர் விடயத்தில் மெத்தனமும் ஊடகவியலாளர்களைக் கட்டுப்படுத்தும் சட்டமுறைமைகளில் இறுக்கமும் காட்டும் அரசு,ஊடக சுதந்திரத்தை பறிக்கும் எண்ணம் தனக்கு இல்லை என்று அழகான வார்த்தை களில் அடிக்கடி வெளிப்பூச்சுக்குக் கூறிவந்தாலும் செயலளவில் அதற்கு ஆப்பு வைக்கின்றது என்பது வெளிப்படையானது.

# தெல்லிப்பழை துர்க்கை அம்மன் இன்று தேரேறி வலம் வருவாள்



யாழ்ப்பாணம்,செப்.1

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத் தேர்த்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிகாலை 4 மணிக்கு திருப்பள்ளி எழுச்சியுடன் ஆலய பூசைகள் ஆரம்பமாகும்.

தொடர்ந்து காலை 7.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று காலை 9 மணிக்கு அம்பாள் தேரில் எழுந்தருளி வீதியுலா வருவார்.

தேர்த்திருவிழாவை முன்னிட்டு இலங்கை போக்குவரத்து சேவை மற்றும் தனியார் சிற்றூர்தி சேவை ஆகியன குடாநாடு முழுவதும் விசேட பஸ்சேவைகளை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

ஆலய வீதியில் அமைந்துள்ள அன்ன சத்திரத்தில் விசேட அன்ன தானம் வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தேர்த்திருவிழா தினமான இன்று விசேட நிகழ்வாக திருமஞ்ச வெள்ளோட்டச் சிறப்பு மலர் வெளியீடு இடம்பெறவுள்ளது.

காலை 8.50 மணிக்கு ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத் தலைவர் ஆறு. திருமுருகன் தலைமையில் நடை பெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் மலரை வெளியிட்டு வைப்பார்.

அதன் முதற் பிரதியை ஆலயகுரு வா.அகிலேஸ்வரக் குருக்கள் பெற்றுக் கொள்வார்.

தேவஸ்தான வெளியீடான 'அருள் ஒளி' சஞ்சிகையின் 70ஆவது வெளியீடாக இந்தச் சிறப்பு மலர் வெளியிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாளை புதன்கிழமை காலை 8 மணிக்குத் தீர்த் தத் திருவிழா இடம் பெறும் அன்று மாலை கொடியிறக்கம் இடம் பெறும். (203-86)

## ஆய்வுக்கட்டுரை எழுதுவது பற்றிய விரிவுரை

யாழ்ப்பாணம்,செப்.02

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் வழைமையாக நடத்திவரும் கருத்தரங்குத் தொடரில் நாளை புதன் கிழமை ஆய்வுக்கட்டுரை எழுதுதல் தொடர்பான விரிவுரை நடைபெறும்.

பல்கலைக்கழக புவியியல் துறை மண்டபத்தில் நாளை நண்பகல் 12 மணிக்கு விஞ்ஞான சங்கத்தின் தலைவர் கலாநிதி எஸ். சந்திரசேகரம் தலைமையில் விரிவுரை நடைபெறும் அதில் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ம.சரவணபவ ஐயர் மேற்கண்ட தலைப்பில் உரையாற்றுவார்.

# குற்ற விசாரணை நடவடிக்கைகள் இனி சட்டமா அதிபர் திணைக்களத்திடம்

கொழும்பு, செப். 01

பொலிஸாரால் மட்டும் மேற்கொள்ளப்பட்டு வந்த குற்ற விசாரணைகளை எதிர்காலத்தில் சட்ட மா அதிபர் திணைக்களத்திடம் ஒப்படைக்க அரசு தீர்மானித்திருக்கிறது.

நாட்டில் பாரிய குற்றச் செயல்கள் அதிகரித்துச் செல்வதால் அவைபற்றிய புலன்விசாரணைகள் துரிதப்படுத்தப்பட வேண்டுமென்ற நோக்கத்துடனேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நீதி மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த் மொறகொட, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ், பொலிஸ் மா அதிபர் ஜயந்த விக்கிரமரத்ன ஆகியோருடன் இயங்கும் ஒருங்கிணைக்கப்பட்ட குற்றத் தடுப்பு பணியகம் அரசுக்கு விடுத்த பரிந்துரைக்கு ஏற்ப இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என அரச உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பணியகத்தின் அறிக்கையின் படி தற்போது பொலிஸாரால் நீதிமன்றத்தில் தொடரப்படும் குற்றச் செயல் வழக்குகளில்85 வீதமானசந்தேகநபர்கள் விடுதலை செய்யப்படுகின்றனர். இது ஆ[illegible]க்கியமான நிலை இல்லை எனவும், சந்தேக நபர்கள் சரியாக வும் நுணுக்கமாகவும் விசாரிக்கப்பட் டால் 50 வீதமானோர் தண்டனை பெறுவார்கள் எனவும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய இனிவரும் காலங்களில் சட்ட மா அதிபரின் வழிநடத்தலில் இந்நடவடிக்கை பொலிஸாரால் மேற்கொள்ளப்படும். இதற்கென புதிய சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்படும் பட்சத்தில் அதனைச்செய்ய நீதியமைச்சு நடவடிக்கை எடுக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## இலங்கை வங்கியின் கொக்குவில் கருமபீட ஆரம்ப நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.1

இலங்கை வங்கியின் கொக்குவில் கருமபீடம் ஆரம்ப நிகழ்வு நாளை புதன் கிழமை காலை 9.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் அமைந்துள்ள இலங்கை வங்கியின் கொக்குவில் கிளையில் நடைபெறவுள்ளது.

இலங்கை வங்கியின் செயற்பாட்டு முகாமையாளர்க.ஜெயேந்திரா, முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இந்த நிகழ்வில் யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம், கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் அ.அகிலதாஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், இலங்கை வங்கியின் மாவட்ட முகா மையாளர் வீ.சி சிவநாதன் விசேட விருந்தினராகவும் கலந்து கொள்வர். (50-204)

## பருத்தித்துறையில் யூனியன் அஷ்யூரன்ஸ் கிளை இன்று திறப்பு

யாழ்ப்பாணம்,செப்.1

யூனியன் அஷ்யூரன்ஸ் காப்புறுதி நிறுவனத்தின் புதிய கிளை ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை பருத்தித்துறையில் முற்பகல் 11.15 மணியளவில் திறந்துவைக்கப்படுகின்றது.

இந்தத் திறப்பு விழாவில் யூனியன் அஷ்யூரன்ஸ் காப்புறுதி நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி திருமதி மரீனா தர்மரட்ணம், பதில் பிரதம நிறைவேற்று அதிகாரி டேக் பெரேரா, மற்றும் யூனியன் அஷ்யூரன்ஸ் காப்புறுதி நிறுவனத்தின் ஆயுட் காப்புறுதி பொதுமுகாமையாளர் ருக்மன் வீரரட்ண, உதவிப் பொதுமுகாமையாளர்களான நாலக தர்மரட்ண, நிகால் ஹதுன்கே, சந்தைப்படுத்தல் பிரிவு முகாமையாளர் மஹிந்த குணசேகர மற்றும் யூனியன் அஷ்யூரன்ஸின் யாழ்.மாவட்ட முகாமையாளர் பி.எம்.மதிவதனன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்திற்கு அருகில் அமையும் இந்தக் கிளையினை யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி திருமதி மரீனா தர்மரட்ணம் திறந்து வைப்பார். (50-9)

## பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களுக்கான குறைகேள் நடமாடும் சேவை தென்மராட்சியில்

யாழ்ப்பாணம், செப்.1

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கான குறைகேள் நடமாடும்சேவை எதிர்வரும் 18ஆம், 19ஆம் திகதிகளில் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் வடக்கு மாகாண கல்வி அமைச்சும் மாகாணக் கல்வித் திணைக்களமும் இணைந்து இந்த நடமாடும் சேவையினை நடத்தவுள்ளன.

பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் நடமாடும் சேவையில் தமது குறைபாடுகள்தொடர்பானவிவரங்களை சமர்ப்பிக்க விரும்பினால் வலயக் கல்வி அலுவலகத்தினால் வழங்கப்படும் படிவத்தினைப் பூர்த்தி செய்து நாளை மறுதினம் வியாழக்கிழமை கையளிக்கு மாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (50-207)

## நாளை

| | |
|---|---|
| ஆவணி 17 | 02.09.2009 |
| | புதன்கிழமை |
| திதி: | திரயோதசி |
| | மாலை 06.30 வரை |
| நட்சத்திரம்: | திருவோணம் |
| | மு.இ. 09.39 வரை |

பிரதோஷ விரதம்

[illegible] 04.35 - 06.05

ராகுகாலம்: 12.05 - 01.35

## பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களில் பொலிஸார் சிவில் உடையில் கண்காணிப்பு

வலி.வடக்கு, செப்.1

சுன்னாகம் பொலிஸ் பிரிவில் பொது மக்கள் அதிகமாகக் கூடும் இடங்களில் பொலிஸார் சிவில் உடையில் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் பிரதான வீதிகள் உட்பட உட்புறம் அமைந்துள்ள வீதிகளிலும் மோட்டார் சைக்கிள்க ளில் ரோந்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவில் இடம் பெறும் திருட்டுக்கள் மற்றும் வீதிகளில் பொதுமக்களுக்கு ஏற்படுத்தும் இடையூறுகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை சுன்னாகம் பொலிஸார் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் ஒரு கட்டமாக பிரதான வீதிகள் தவிர்த்து உள் வீதிகளிலும் பொலிஸார் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன் சந்தேகத்துக்கு இடமான மோட்டார் சைக்கிள்கள் மறித்துச் சோதனையிடப்படும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொலிஸாரின் இந்த நடவடிக்கைகளை பொது அமைப்புகள் பலவும் பாராட்டியுள்ளதுடன் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த இத்தகைய நடவடிக்கைகள் உதவும் எனவும் தெரிவித்துள்ளன. (201-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்



## திருமதி இந்திரா குலராஜன்

(உப அதிபர்)

**திகதி: 01.09.2009**

அப்பா அம்மா வளர்ப்பிலே அன்பைப் பெற்று ஈரேழ் பிறப்பிற்கும் தொடரும் கல்வியைத் தன்னால் பெற்று கல்வி மூலம் நிறைவேற்றி உதவி அதிபராகப் பதவி பெற்றுச் சிறந்த பண்பாளர் பொறுமைசாலி என உறவுகளால் பெயர்பெற்று இன்றைய பொன்விழா நாளிலே பிறந்தநாள் காண்கிறீர். இந்த நன்நாவில் சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடூழிகாலம் வாழ அம்மன் தாயாரை வணங்கி வாழ்த்துகின்றோம்.

தகவல்:
திருமதி த.பாலசுப்பிரமணியம்,
ஏழாலை தெற்கு,
சுன்னாகம்.

வாழ்த்துவோர்:
அம்மா, கணவர், தங்கை, மைத்துனர், மகள்.

(88425)

# வடமராட்சி தவிர்ந்த ஏனைய பிரதேச மினிபஸ்களுக்கும் சந்நிதியில் இடம் ஒதுக்கப்படும்

## பிரதேச செயலர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், செப்.01

வடமராட்சி தவிர்ந்த ஏனைய பிரதேச சிற்றூர்திகள் (மினிபஸ் வண்டிகள்) தொண்டைமானாறு செல்வச் சந்நிதியில் தரித்துச். செல்ல உரிய இடம் ஒதுக்கப் படும் என பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் தெரிவித்தார்.

ஏனைய பிரதேச சிற்றூர்திகள் சந்நிதி உற்சவகாலத்தில் தரித்துநின்று சேவையில் ஈடுபட இடம் ஒதுக்கப்படவில்லை என முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பருத்தித்துறை பிரதேச செயலர் விளக்கமளிக்கையில் -

சந்நிதியில் போதிய இடவசதியுண்டு. பெருந் திருவிழா தொடர்பான செயற்பாட்டுக் கூட்டங்களில் வடமராட்சி தவிர்ந்த ஏனைய பிரதேச சிற்றூர்தி சேவைகள் சங்கப் பிரதிநிதிகள் கலந்துகொண்டு தமது தேவை குறித்து தெரிவிக்க முன்வரவில்லை.

இந்நிலையில் அப்பிரதேசங்களைச் சேர்ந்த சிற்றூர்திகள் தரித்துநின்று சேவையாற்ற உரிய இடம் ஒதுக்க நாம் தயாராக உள்ளோம். சம்பந்தப்பட்டோர் சந்நிதியில் அல்லது பருத்தித்துறையில் உள்ள எமது அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு சிற்றூர்தி தரிப்புக்குரிய இடத்தைப் பெற்றுக் கொள்ளலாம் - என அவர் மேலும் தெரிவித்தார். (1-236)

## விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய விலாசம்

நேற்று முன்தினம் (30.08.2009) உதயனில் வெளிவந்த Sri Lanka Red Cross Society என்ற தலைப்புடனான விளம்பரத்துக்கான விண்ணப்பங்களை விண்ணப்பதாரிகள் கீழ்வரும் முகவரிக்கு 07.09.2009 க்கு முன் அனுப்பிவைக்கவும்.

தலைவர்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்கிளை,
73,கண்டி வீதி,யாழ்ப்பாணம்.

(560558)

## நன்றி நவில்கின்றோம்

வவுனியா நலன்புரிமுகாமில் இருந்து விடுவிக்கப்பட்டு யாழ்ப்பாணம் அழைத்து வரப்பட்ட இந்து மதகுருமார்கள் குடும்பத்தினர் எமது குருகுல கலாசாலையில் கையளிக்கப்பட்ட நிகழ்வில் கலந்து, எம் முடன் ஒத்துழைப்பு நல்கிய நிர்வாக சபையினர், மிக விரைவாக பதிவுகளை செய்த நிர்வாக அலுவலர், சிற்றுண்டி வகைகளை மனமுவந்து அளித்து சிறப்பித்த பிரம்மஸ்ரீ.நா.பாலசுப்பிரமணிய குருக்கள் குடும்பத்தினர் அனைவருக்கும் பேருவகையுடன் நன்றி நவில்கின்றோம்.

செயலாளர்,
சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியம்.

(88441)

# தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் அரச அதிபரிடம் மகஜர் கையளிப்பு

யாழ்ப்பாணம்,செப்.01

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் கடந்த சில நாள்களாக பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மாணவர்கள் நேற்று பி.ப. 2.15 மணிக்கு தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை யாழ். அரச அதிபரிடம் கையளித்தனர்.

அம்மகஜரில் தொழில்நுட்பக் கல்லூரியில் நிலவும் விரிவுரையாளர்கள் பற்றாக்குறை, வளப்பற்றாக்குறைகள், நிர்வாக சிக்கல்கள் தொடர்பான பதினேழு கோரிக்கைகள் இடம்பெற்றுள்ளதாக மாணவர் தரப்பு தெரிவித்தது. (06-111)

## போஃர் ஸ்ரார் விளையாட்டுக்கழகம்

**சீட்டிழுப்பு முடிவுகள்**

1ஆம் பரிசு - 5154
2ஆம் பரிசு - 4437
3ஆம் பரிசு - 2545

ஆறுதல் பரிசுகள் இலக்கங்கள்
4546,3462,0068,4534,4928,2742,0650,0148,2951,0176
ஒரு வாரத்தினுள் பரிசுகளைப் பெற்றுக்கொள்ளவும்.

நிர்வாகம்,
25/1,4ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(88437)


# NEW SCIENCE HALL

கன்னாதிட்டி யாழ்ப்பாணம்

## DAY CLASS 2010 A/L

(2009A/L பரீட்சைக்கு தோற்றியவர்கட்குரியது)
★கணித, உயிரியல் பிரிவு★
திங்கள் தொடக்கம் வெள்ளிவரை

| | |
|---|---|
| BIOLOGY - | திரு. T கெங்காதரன், வழமையான ஆசிரியர், திரு. M.M அல்போன்ஸ் |
| COM. MATHS - | திரு. S. செந்தில் ராஜ், திரு. P. செந்தில் நாதன் திரு. குணம் |
| PHYSICS - | திரு. R. குகன், திரு. S. சோதிலிங்கம் |
| CHEMISTRY - | திரு. K. சிவத்திரன் திரு. N.மகேஸ்வரன் |

ஆரம்பம் :- 01.09.2009 இன்று காலை 7.30 a.m.


## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் சக ஆசிரியை
திருமதி ராஜ்குமார் நவமணி அவர்களின் அன்புத் தாய்

**திருமதி வல்லிபுரம் செல்லம்மா**

காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/ செங்குந்த இந்துக் கல்லூரி. நல்லுறவு மன்றம்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சின்னையா இராசம்மா

தாவடி வடக்கை பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னையா இராசம்மா நேற்று (31.08.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவசிவாயம் -ஆச்சிமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னையாவின் அன்பு மனைவியும், சிவபாதம், சிவபாக்கியவதி, துரைசிங்கம், குபேந்திரராஜா ஆகியோரின் அன்பு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.09.2009) செவ்வாய்க்கிழமை நண்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கே.கே.எஸ் வீதி,
கோண்டாவில். (88440)

தகவல்:
சி.சிவபாதம்.

### திருமதி உதயநாதன் ரஞ்சிதமலர்

(ஆசிரியை, யாழ். ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலை)



சுன்னாகம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி உதயநாதன் ரஞ்சிதமலர் 29.08.2009 சனிக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் சுகுமார் உதயநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வீரகத்தி நாகராசா - நாகராசா ஜெயமணி தம்பதியினரின் அன்பு மகளும், ஆகாஸ், திருசிகா ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.09.2009) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம். (88434)

தகவல்:
சு. உதயநாதன் (கணவர்)


## தவறிவிட்டது

கச்சேரி தபாலகம் அருகே தங்கவேலு வெங்கடேசன் என பெயர் கொண்ட எனது விசேட, பல்கலைக்கழக அடையாள அட்டைகள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கபிலா காலணியகத்திடம் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

## தேவை

ரைப் செற்றிங் தெரிந்த பெண்பிள்ளைகள் தேவை. பயிலுநர்களும் தேவை.
அனுபவத்திற்கேற்ற சம்பளம் வழங்கப்படும்.
05,06 ஆம் திகதிகளில் காலை 9.00 - 12 மணிவரை நேரில் வரவும்.
லங்கரன் ஓவ்செற், சிவலிங்கப் மந்திகை.
T.P. 021 226 3641
(88427)

## அறைகள் வாடகைக்கு

பல்கலைக்கழக/வேலை செய்யும் பெண்களுக்கு மாத அடிப்படையில் தங்க வசதியுள்ள அறைகள் வாடகைக்குண்டு.
விபரங்களுக்கு: 350, பலாலி வீதி,யாழ்ப்பாணம்
(560555)

## தவறிவிட்டது

விழிசிட்டி தெல்லிப்பழை என்னும் முகவரியுடைய வீரகத்தி முருகையா என்பவரது தேசிய அடையாள அட்டை (471074276V) தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் 0776681521 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள் ளவும்.

## காணி, நகைக்கடை விற்பனைக்கு

யாழ். நகர் மத்தியில் கஸ்தூரியார் வீதியில் இரு நகைக் கடைகளும், யாழ். பிறவுண் வீதியில் 1¼ பரப்பளவு கொண்ட காணியும் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
077 6002635, 0778410381

## தேவை

எமது ஸ்தாபனத்திற்கு புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ள பழகவிரும்பும் பெண்கள் மற்றும் 40 - 45 வயதுடைய ஆண் தேவை. யாழ் நகரத்தை அண்டிய பகுதியில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

**லைடன் புடவை நிலையம்**
410, ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம்
(யாழ் பஸ் நிலையம்முன்பாக)
(560569)

## இலவச கருத்தரங்கு

எழுத, வாசிக்க, உரையாட
GCE (O/L) பரீட்சை எழுத
**சிங்களம்**
கற்பது எப்படி
கருத்தரங்கு
05.09.2009 சனி 10.00 a.m.
பேராசிரியர் சு. லீலாகிருஷ்ணன்

கணக்கியல்துறை ஆர்வலர்களிற்காக!
முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன்!
கம்பனிக்கணக்குகளுடன், VAT இனையும் உள்ளடக்கி

## Diploma in Computerized Accounting

உங்கள் நிறுவன கணக்குகளை நீங்களே கணனிமயப்படுத்தும்படியான 100% செய்முறைப்பயிற்சியுடன்..

சர்வதேச ரீதியில் முன்னணியிலுள்ள கணக்கியல் மென்பொருட்களான
**Quick Book + ACCPAC + MYOB**
ஆகியவற்றினூடாக கற்பிக்கப்படும்

Tally புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றது.


Batch I : 10.00 AM
Batch II : 02.00 PM } 02/09/2009

Batch I : 10.00 AM
Batch II : 02.00 PM } 04/09/2009

**COMPUTER EXPRESS**
Head Office : #167, Kasthuriyar Rd, Jaffna
Phone : 0212228250


## 93 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
09 ★ 05 ★ 1972



மறைவு
01 ★ 06 ★ 2009

**சுப்பிரமணியம் சிவகுமார்**

நாள்கள் தொண்ணூற்றுமூன்று ஆனாலும்
ஆறவில்லை எம் மனம்
காலன் அவன் கவர்ந்தாலும்
காலம் எல்லாம் வாழ்ந்திடும்
எழுதி வைத்த ஓவியமாய்
எம்முடனே வாழ்ந்திடுவாய் குமார்

என்றும் நினைவுடன்:
தாய்,அண்ணன்
உறவினர்கள்,நண்பர்கள்.

மான் பாடசாலை வீதி,
உடுவில். (88426)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஸ்ரீலங்கா செவிப்புலனற்றோர் நிறுவனத்தின் 6 ஆவது ஆண்டுவிழா நிறுவனப் பணிமனையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் சில்வெஸ்ரர் அகஸ்ரின் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் செவிப்புலனற்றோர் நிறுவனத்தின் தலைவர் கோ.வள்ளிகாந்தன் நிற்பதையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம்.

நல்லூர்ப் பிரதேச செயலக முன்னாள் பிரதித்திட்டப் பணிப்பாளர் எஸ்.ரவீந்திரசர்மாவுக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் என்.சண்முகலிங்கன் பொன்னாடைபோர்த்திக் கௌரவிப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்ட பொதுமக்களையும் ஏனைய இரண்டு படங்களில் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

## வன்னியில் இருந்து வந்து வலி.மேற்கில் மீள்குடியேறியுள்ளோர் விவரம் திரட்டல்

மூளாய், செப்.1

வன்னிப்பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தற்போது வலி.மேற்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாச எல்லைக்குள் மீள்குடியேறிய குடும்பங்களின் விவரங்களும், தொழில் உபகரணங்களின் விவரங்களும் திரட்டப்பட்டு வருகின்றன.

இத் தகவலை வலி.மேற்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் ஆ.க.குலசிங்கம் தெரிவித்தார்.

இவ்வாறு மீள் குடியேறிய குடும்பத்தினர் தங்களின் குடும்ப விவரங்களை கிராம அலுவலரின் சிபார்சுடன் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளனர். அத்துடன் அவர்கள் தமது படகுகள், இயந்திரங்கள் தொடர்பான விவரங்களை சங்கத்தின் உறுதிப்படுத்தலுடனும் எதிர்வரும் புதன் கிழமைக்கு முன்னதாக சமாசத்தில் சமர்ப்பிக்குமாறு சமாசத் தலைவர் மேலும் தெரிவித்தார்:(04- 93)

## கெருடாவில் விவசாயிகளுக்கு விவசாய உற்பத்திக் கடன்

கரவெட்டி, செப்.1

கெருடாவில் விவேகானந்த சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்கத்திற்கு இலங்கை வங்கியின் வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் என்.சிவரட்ணம் விவசாய உற்பத்திக் கடன் வழங்கினார்.

சங்கத்தின் தலைவர் கே.அரசரட்ணம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு 50 விவசாயப் பயனாளிகளுக்கு உற்பத்திக் கடனை வழங்கினார்.

மேலும் பயனாளிகள் கடனை மீளளிக்கப்படும் தன்மையைப் பொறுத்து அடுத்த கட்டமாக பயனாளிகளின் எண்ணிக்கை மேலும் 100 பேர் வரை அதிகரிக்க வழி செய்யப்படும் எனவும் உறுதி கூறினார். (203-70)

## சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை வியாழன் முதல் சொந்தக் கட்டடத்தில்

யாழ்ப்பாணம், செப்.1

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை நாளை மறுதினம் வியாழக்கிழமை தனது சொந்தக் கட்டடத்தில் இயங்கவுள்ளது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலிருந்து இந்து ஆரம்பப் பாடசாலை பிரிந்த காலம் தொடக்கம் இந்துக் கல்லூரி கட்டடத்திலேயே இயங்கி வந்தது.

அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான சுவிஸ் முகவர் அமைப்பினால் இப்பாடசாலைக்கென சாவகச்சேரி தாமோதரம்பிள்ளை வீதியில் பல லட்சம் ரூபா செலவில் தனியான மாடிக் கட்டடங்களைக் கொண்ட வகுப்பறைத் தொகுதிகள் நிர்மாணிக்கப்பட்டது.

இக் கட்டடங்கள் நாளை மறுதினம் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான சுவிஸ் முகவர் நிறுவன யாழ். மாவட்ட தலைமை வெளிக்கள அலுவலர் சேர் ஷாள்ஸ் பீற்றர் எற்றரினால் திறந்து வைக்கப்படவுள்ளன.

பாடசாலை அதிபர் திருமதி சி. கந்தசாமி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினர்களாக யாழ். மேலதிக கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம், தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் ஆகியோரும் கலந்து கொள்வர். (1- 207)

## வல்வெட்டித்துறை நகரசபையால் சந்நிதியில் குடிதண்ணீர் வசதிகள்

வடமராட்சி, செப்.1

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு வரும் பக்தர்களின் நலனைக் கருத்திற்கொண்டு வல்வெட்டித்துறை நகரசபையினரால் ஆலய வீதிகளில் குடிதண்ணீர் வசதிகள் விசேடமாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தற்போது ஆலயத் திருவிழா காலமாகையால் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் தினமும் ஆலயத்துக்குச்சென்றுவருகின்றனர்.

சாதாரண சூழல் நிலவுவதால் பக்தர்கள் இரவுவேளைகளிலும் ஆலயத்தில் தங்கி வருகின்றனர்.

ஆலய வீதியில் உள்ள 18இற்கும் மேற்பட்ட அன்னதான மடங்களில் தினமும் அன்னதானம் நடைபெற்று வருகின்றது.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், வல்வெட்டித்துறை நகரசபையின் உதவியுடன் சுகாதார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இலையான் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆலய வீதிகளில் தற்காலிக பொலிஸ் நிலையம், வல்வெட்டித்துறை நகர சபையின் உப அலுவலகம், சுகாதாரத்திணைக்கள அலுவலகம் என்பன அமைக்கப்பட்டுள்ளன. (203- 236)

## வலி. கிழக்கு விவசாயிகள் மழையை அடுத்து விவசாய நிலங்களைப் பண்படுத்துவதில் மும்முரம்

யாழ்ப்பாணம், செப்.1

கடந்த வாரம் பெய்த கனமழையை அடுத்து வலி. கிழக்குப் பிரதேசத்தில் பெரும்போக நெற்செய்கையை மேற்கொள்வதற்கான முன்னேற்பாடுகளை விவசாயிகள் மும்முரமாக மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பிரதேச வயல் நிலங்கள் உழவு இயந்திரங்கள் மூலம் உழுது சீர்செய்யப்பட்டும் மற்றும் பசளை போடும் பணியிலும் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

அதேசமயம் நெற்செய்கை இன்றி தரிசு நிலங்களாக இருக்கும் வயல்களை விவசாயிகள் சீர் செய்யும் பணியிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

சில வயல்களில் பற்றைகள் வளர்ந்திருப்பதால் அவை வெட்டி அழிக்கப்பட்டு வருகின்றன. (203-224)

# தமிழ் வளர்க்கத் தொண்டாற்றிய தவத்திரு தனிநாயகம் அடிகளார்

**தமிழ்ப் பேரறிஞர் தவத்திரு தனிநாயகம் அடிகளார் மறைந்த 29 ஆவது நினைவு தினம் இன்றாகும். அதனையொட்டி அடிகளார் குறித்து வித்துவான் எப்.எக்ஸ்.ஸி. நடராஜா எழுதிய கட்டுரையின் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகிறது.**

திருவுங் கல்வியுஞ் சீருந்தழைத்த தனிநாயக அடிகளார் தமது இழுமென்மொழியால் விழுமிய தொண்டுகள், பணிகள் பல புரிந்து தமிழன்னையைச் சீராட்டிப் பாராட்டிச் சிறப்புறவைத்த பெருமகனாவார்.

### பிறப்பும் கல்வியும்

பசுத்தீவு எனப் பாராட்டுப்பெற்ற நெடுந்தீவு தனிநாயக அடிகளாரின் தந்தை வழிப் பிறப்பகம். தாயார் ஊர்காவற்றுறை, இவ்வண்ணம் யாழ்ப்பாண நன்நாட்டிலே பிறந்து சம்பத்திரிசியார் கல்லூரியிற் பயின்று குருத்துவப் படிப்பிற்காக உரோமாபுரி சென்றார். அங்கு இறையியற் பல்கலைக்கழகத்திற் குருத்துவம் பயின்று இறையியலிற் கலாநிதிப் பட்டமும், பன்மொழிப் புலமையும் பெற்று நாடு திரும்பினார். தமிழ் கற்க விழைந்தார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற் சேர்ந்தார். 'முதுமாணிப் பட்டம்' பெற்றும் மன நிறைவு காணாது இலக்கிய முதுமாணியுமானார்.

தமிழ்த் தூதராக ஓயாது அயராது உயரிய பணியாற்றிய பேரறிஞர் தனிநாயகம் அடிகளார் உள்ளத்தால், உருவத்தால், மூச்சால், பேச்சால், நடையால், உடையால், எண்ணத்தால், பண்பால் உயர் தனிச் செம்மொழியாம் தமிழ் தழைக்க விழைந்து உழைத்து விழுமிய பயனுங் கண்டார்.

பல்கலைக்கழகங்களில் நிறைந்த கல்வியைப் பெற்றார். பரந்துபட்டிருக்கும் உலகெங்கணும் தமிழ்த்தூது கொண்டு செல்ல முயன்றார். அமெரிக்காவுக்குச் சென்று தமிழர் பண்டைய நாகரிகம், பண்பாடு, கலாசாரம், இலக்கியம் இவை தொடர்பான விரிவுரைகள் நிகழ்த்தினார். அங்குள்ள பல்கலைக் கழகங்களிலும் விரிவுரைகள் செய்தார். ஆண்டொன்றிற்கு இருநூறுக்கு மேற்பட்ட சொற்பொழிவுகள் ஆற்றினார். கற்றோர்க்குச் சென்ற விடமெல்லாம் சிறப்புண்டு.

முதலிற் கல்விபெற்றார். பெற்ற கல்வியைத் துணையாகக்கொண்டு திருவும் பெற்றார். கல்[illegible] பெற்றதும் சீரும் பெற்றார்.

பேச்சுடன் நிற்கவில்லை, எழுதவுந் தொடங்கினார். பற்பல உலக சஞ்சிகைகளில் அடிகளாரின் எழுத்தோவியங்கள் வெளிவந்தன. பேச்சு வல்லுநருக்கு எழுதும் ஆற்றல் தன் வலியக் கைகூடும். பல மொழிகள் தெரிந்தவர்; ஆங்கிலம் ஆற்றொழுக்கு, தூயதமிழ், ஆங்கிலமுந்தமிழும் அடிகளாரின் நாதவிந்து, தோற்றமுங் குரலும் கம்பீரமானவை. மொழிநடையும் அடிகளாருக்குரிய தனிப்பாணி.

### தமிழும் ஆங்கிலமும்

தனிநாயகம் அடிகளார் தூத்துக்குடியில் திருமாமறை ஆயருடனிருந்து பணியாற்றிய காலத்தில் தமிழ் இலக்கியக்கழகம் புத்துணர்ச்சி பெற்று எழுந்தது. கத்தோலிக்க எழுத்தாளர் சங்கமும் நிறுவப்படலாயிற்று. அடிகளார் சங்கமும் நிறுவப்படலாயிற்று. அடிகளார் புலவரானார். புலவர்கள் வந்து கூடினர். நூல்கள் பல உருப்பெற்றன. தூத்துக்குடியில் 1952 இல் எழுந்தாளர் மாநாடு, 1953 இல் கோயம்புத்தூரில் அடுத்த எழுத்தாளர் மாநாடு. ''தமிழர் பண்பாடு'' என்ற ஆங்கில சஞ்சிகை (Tamil Cultere) ஆரம்பமானது. உரோமாபுரியில் இருக்கும் போதே வீரமாமுனிவர் கழகம் நிறுவி வானொலி மூலம் தமிழோசை ஒலிக்கச் செய்தார். திருமறையினையும் வளர்த்தார். தீந் தமிழினையும் அபிவிருத்தி செய்தார்.

### பல்கலைக்கழகமும் உலகத் தமிழும்

திருமறை வளர்க்கப்புகுந்த அடிகளார் தமிழ்மொழி விருத்திக்கும், உழைத்தார். தமிழ்மொழி மூலமே தமிழ் மக்கள் மத்தியிற் திருமறை வளர்த்தல் சாலப் பொருத்தமுடைத்தென்று எண்ணினார். பல்கலைக் கழகங்களுடன் தொடர்பு ஏற்படலாயிற்று, இலங்கைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளர் பதவி பெற்றார். லண்டன் பல்கலைக் கழகத்தில் கலாநிதிப் பட்டமும் பெற்றார். தமிழறிஞர், பிரமுகர் இவர்களுடன் பழக்கமும் பெற்றார். மலேசியப் பல்கலைக்கழகத்தில் கீழைத்தேயக் கல்விப் பேராசிரியரானார்.

உலகத்தமிழ் மாநாடு கூட்டுவதற்கான ஏற்பாடுகளில் முனைந்து உழைத்தார். அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் அடிகளாரின அயரா உழைப்பால் உருவாயிற்று. மன்றம் எடுத்த முதலாம் மாநாடு அடிகளாரின் அயரா உழைப்பால் கோலாலம்பூரில் வெகு கோலாகலமாக இனிது [illegible]

### விருது வாக்கியம்

அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் விருதுவாக்கியமாக யாதும் "ஊரே யாவரும் கேளிர்'' என்ற அடி அடிகளாரால் பொறித்துக் காட்டப்படலாயிற்று.



திருமந்திரத்தின் ஒரு மூலையிற் பதுங்கி ஒதுங்கிக் கிடந்த தன்னேரில்லா ஈரடிகளைத் தமிழ் கூறும் நல்லுலகிற்கு விதந்துரைத்துக் காட்டியவரும் அடிகளாரே. 1951ம் ஆண்டு சித்திரைத் திங்கள் யாழ்ப்பாணத்திலே நடைபெற்ற தமிழ் வளர்ச்சிக்கழகம் நடத்திய தமிழ் விழாவில் உரையாற்றிய அடிகளார் தமது பேருரைக்கு முத்திரை பதிகும் முகமாக:

''என்னை நன்றாய் இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாய்த் தமிழ் செய்யுமாறே''

என்று தமது கம்பீரமான குரலில் கூறியதன் மூலம் உலகத் தமிழ் மக்களது பெருமதிப்புக்குப் பாத்திரமானார்.

### யாவரும் போற்றும் மாதவன்

அன்புக் கரம் நீட்டி ஆதரிக்கும் பண்புடையாளர். பண்பெனப்படுவது ''பாடறிந்து ஒழுகுதல்'' இதற்கு அடிமையானவர் அடிகளார். சீறவோ சினக்கவோ அவருக்குத் தெரியாது. குறை சொல்லவுந் தெரியாது. நிறைய நிறை செல்லுவார். இன்னார் என்பவருமிலர்; இனியர் என்பவருமிலர். யாவரையும் ஒப்பநோக்கும் மனப்பான்மை உடையவர். சமய, சமூக வாதங்கள் கடந்தவர். சமத்துவம், பரத்துவம், தத்துவம் போன்ற அனுபவங்கள் பொதிந்தவர்.

கத்தோலிக்க துறவியுமானார். தமிழ்த் தொண்டருமானார். திருமறைத்துறை யோகியவர்; குருத்துவக் கடமைகளை முறைப்படி அனுசரித்தவர். இறை வழியில் நின்றவர். இறைமைக் குணங்களாகிய செம்மை, உண்மை, நன்மை என்ற தன்மை வாய்ந்த தமிழ்மொழியும் தழைத் தோங்கச் செய்வதற்காக முதலிற் தமிழினை நன்கு பயின்றனர். பின்னர் வீரமுழக்கஞ் செய்தனர். எட்டுத் திசையும் இசைபோக உழைக்க விழைந்தனர். எடுத்த கருமம் தொடுத்து முடித்தனர். உலகம் உவப்ப நடந்தனர். தமிழ்த் துறையெலாங் கண்டனர். வெற்றி கொண்டனர். உடல் பொருள் ஆவி எல்லாம் துறந்து இறைவனடி சேர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது ஆண்டு திருமண வாழ்த்து

## திரு திருமதி கிரிதரன் பிரியலோஜினி



திரு. திருமதி கிரிதரன் - பிரியலோஜினி
தம்பதியர் தமது முதலாவது
திருமணநாளை இன்று (01.09.2009)
செவ்வாய்க்கிழமை
கொண்டாடுகிறார்கள். இவர்களை அன்பு
அப்பா, அம்மா, மகள் டிஷாணி,
தங்கைமார், தம்பிமார், மாமாமார்,
மாமிமார்,சித்தப்பாமார், சித்திமார்,
இல்லற வாழ்வில் சீரும் சிறப்பும் பெற்றுப்
பல்லாண்டு காலம் இணைந்து நற்சுகமும்
நல்வாழ்வும் வாழ எல்லாம் வல்ல
இறைவனை வேண்கின்றோம்.

தகவல்:
க.மகாலிங்கம் (பஞ்சு மாமா),
அப்பா.
பாடசாலை வீதி,
தாவடி தெற்கு, தாவடி. (சி/560550)


## கலந்துரையாடல்

வடமராட்சி கல்வி வலய பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளதாக வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் நடமாடும் சேவை தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளதாகவும் கடந்த ஒகஸ்ட் 31 ஆம் திகதி வரையான தர உள்ளீட்டு செலவுக் கூற்றுடன் அதிபர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (201)

## கூட்டம்

கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலையில் நடைபெறவுள்ளதால் அனைவரையும் சமுகமளிக்குமாறு வித்தியாலய அதிபர் அறிவித்துள்ளார். (201)


## தவறிவிட்டது

ஞானமுத்து மேரி செல்வராணி என்பவரது தேசிய அ.அட்டை (755173665V), மற்றும் முக்கிய ஆவணங்கள், சிறுதொகைப் பணம் என்பன அடங்கிய கைப்பை திருகோணமலைக்கும், தெல்லிப்பழைக்குமிடையே 27.08.2009 அன்று தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். தொ.பே.இல: 0772416697

யாழ்ப்பாணத்தில் மானிப்பாயில்






# POWER GYM
BODY CARE & FITNESS CENTRE

இன்று 7வது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும்
POWER GYM புதிதாக இணையும்
அங்கத்தவர்களுக்கு விஷேட கட்டணச்சலுகையுடன்
இலவச Training CD வழங்கப்படுகின்றது.

- ★ யாழ் மாவட்டத்தின் சிறந்த பயிற்றுநர்கள் பயிற்சி வழுங்குகின்றனர்
- ★ Fitness Card மூலமாக உங்கள் உடல் மாற்றத்தினை அறிந்து கொள்ளும் வசதி
- ★ Video மூலமான செய்முறை காட்சி
- ★ உடல் எடையை குறைப்பதற்கான சிறந்த உபகரணங்களின் அறிமுகம்
- ★ எமது பழைய அங்கத்தவர்கள் மாதாந்த கட்டணத்துடன் எமது எந்த GYM இலும் இணைந்து கொள்ளலாம்
- ★ காலை 5 மணியிலிருந்து இரவு 9 மணிவரை திறந்திருக்கும்

மானிப்பாயில் அறிமுகம்
'5'- Station Machine



38, உடுவில் வீதி, மானிப்பாய்
(Green Hospital அருகில்)

230/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(இலிப்பையடி சந்தி அருகில்)

# L திறப்பு விழா



## கோசலா லேணர்ஸ் பின்வரும் பிரதேசங்களில் தமது கிளைகளை ஆரம்பிக்கின்றது.

### ★ தென்மராட்சியில்
டச்சு வீதி, சாவகச்சேரியில் நாளை
(02.09.2009) புதன்கிழமை காலை 7 மணிக்கு

### ★ யாழ்ப்பாணத்தில்
இல.215, இரண்டாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
நாளை (02.09.2009) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில்.

### ★ வடமராட்சியில்
மத்திய மகா வித்தியாலய வீதி, நெல்லியடியில் எதிர்வரும்
(07.09.2009) செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு.

### அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- ★ முன்னாள் இ.போ.ச. சாரதித்துவ விதி முறைகள் நன்கு பயிற்சி பெற்ற பயிற்றுநரும், அனுபவம் வாய்ந்த சாரதியுமான CNR.அன்ரன் அவர்களால் சாரதிப் பயிற்சி வழங்கப்படும்.
- ★ பரீட்சையில் இலகுவில் சித்திபெறுவதற்கான விசேட வகுப்புக்கள் நடத்தப்படும்.
- ★ A/L கற்ற மாணவர்களுக்கு விசேட சலுகைகள் உண்டு.
- ★ குறைந்த கட்டணத்தில் பயிற்றுவிக்கப்பட்டு சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுத்தரப்படும். பதிவுகளுக்கு முந்துங்கள்.

கோசலா லேணர்ஸ்,
22, தும்பளை வீதி,பருத்தித்துறை. (88397)

உரிமையாளர்
S.இரவிச்சந்திரன்

யா/மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை

# வாழ்த்துகின்றோம்



எங்கள் ஆசிரியை
## திருமதி பத்மஜா லோகநாதன்
அவர்கள்

19.08.1974 முதல் ஆசிரியப் பணியில் இணைந்து
01.09.1984 முதல் மகாஜனாவில் இணைந்து இன்று
இருபத்தைந்து வருடங்களை நிறைவு செய்து
விஞ்ஞான ஆசிரியராக, பாட இணைப்பாளராக, பகுதித்
தலைவராகப் பணி செய்து, "ஆசிரியர்" என்பதற்கு ஓர்
இலக்கணமாகத் திகழ்ந்து கல்லூரியின் வளர்ச்சிக்கு
கால் நூற்றாண்டுகளாகப் பெரும் சேவை செய்த எங்கள்
நல்லாசானை மகாஜன சமூகம் நன்றியுடன் வாழ்த்துகின்றது.

அவர்தம் சேவை மேலும் சிறக்கவும் குடும்பம் சிறக்கவும்
எல்லாம் வல்ல சிவகாமி சமேத நடராஜப் பெருமானை வேண்டுகின்றோம்.

யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை. (88270) மகாஜன சமூகம்.


**சி.ஐ.டியினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள**

## மருத்துவர் சிவபாலனின் நிலைகுறித்து சர்வதேச மன்னிப்புச்சபை கவலை

வன்னி யுத்தத்தின்போது பாதுகாப்பு வலயத்தில் பணியாற்றியவேளை, அங்கு ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்து பிழையான தகவல்களை வழங்கினார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மருத்துவர்களில், இதுவரை பிணையில் விடுவிக்கப்படாத மருத்துவர் எஸ்.சிவபாலனின் நிலை குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளது.

வைத்தியர் சிவபாலனின் நிலைகுறித்து கவலை தெரிவித்தும், அவரை விடுவிக்குமாறு கோரியும் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ உட்பட முக்கிய அதிகாரிகளுக்கு கடிதம் எழுதும் பிரசாரமொன்றையும் மன்னிப்புச் சபை ஆரம்பித்துள்ளது.இலங்கை அரசை அவசரகாலச் சட்டங்கள் உட்பட ஏனைய விசேட பாதுகாப்பு சட்டங்களை நீக்குமாறும் மன்னிப்புச் சபை கோரியுள்ளது. (சி)

## வலி. கிழக்குப் பிரதேசத்தில் பனம் பழச்சீசன் ஆரம்பம்

வலி.கிழக்கு பிரதேசத்தில் பனம்பழம் சீசன் ஆரம்பித்துள்ளதால் பனம்பழம் சேகரிப்பில் அதிகளவு பொதுமக்கள் கடந்த காலங்களைக் காட்டிலும் ஆர்வத்தில் ஈடுபட்டு வருகின்றதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

தற்போது பனம் பொருள் உற்பத்திகள் அதிகளவில் தென்னிலங்கைக்கு எடுத்துச் செல்லப்படுவதால் இவற்றின் விலைகள் அதிகரித்துக் காணப்படுகிறது.எதிர்வரும் காலங்களில் இவற்றின் ஏற்றுமதி அதிகரிக்கும் நிலையில் இப் பொருள்கள் மூலம் அதிகளவில் வருமானத்தைப் பெறக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். (201-72)


# IIS
Admissions Open
September 2009



# COMPUTER COURSES

Batch 1:14-09-2009 Batch 3:23-09-2009
Batch 2:19-09-2009 Batch 4:26-09-2009
காலை 10.00மணி

A/L 2009 பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களே
உங்களுக்காகவே விசேட பிரிவுகள் ஆரம்பம்



| Diploma Courses | |
|---|---|
| Courses | Duration |
| Diploma in Microsoft Office | 4Months |
| Diploma in Desktop Publishing | 3Months |
| Diploma in Internet Technology | 4Months |
| Diploma in Hardware Technology | 4Months |
| Diploma in Computer Programming | 4Months |
| Diploma in Computerized Accounting | 4Months |
| Diploma in Audio & Video Editing | 4Months |
| Diploma in Eng Drawing & AutoCAD | 4Months |
| Diploma in DataBase Management | 4Months |
| Diploma in Visual Programming | 4Months |
| Certificate Courses | |
| Certificate in AutoCAD | 2Months |
| Certificate in Java Programming | 2Months |
| Certificate in Visual Basic Programming | 2Months |


இரண்டு Diploma கணனிக்கற்கை நெறிகளுக்கு பதிவினை மேற்கொள்ளும் மாணவர்கள் 3வது Diploma கற்கை நெறியினை முற்றிலும் இலவசமாக கற்கும் வாய்ப்பினை பெற்றுக்கொள்கின்றீர்கள் (நிபந்தனைக்கு உட்பட்டது)

கணனிக் கல்வியை வழங்குவதில் யாழ் குடாநாட்டு மாணவர்களின் மத்தியில் நம்பிக்கைக்கு பாத்திரமான தனித்துவம் மிக்க நிறுவனமாக விளங்கி வருகின்ற IIS கடந்த ஆண்டுகளைப் போன்றே இவ்வாண்டும் A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் அடுத்த இலக்கான உயர்கல்வி வேலைவாய்ப்பு என்பவற்றிற்கு சிறந்த அடித்தளத்தினை உருவாக்கி கொடுக்கும் நோக்கில் அடிப்படைத்தேவையாக விளங்கும் கணனி அறிவினை சிறந்த முறையில் வழங்கிட பல்வேறு கற்கை நெறிகளையும் அறிமுகப்படுத்தியுள்ளோம்.

கணனிக் கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்

INSTITUTE OF INFORMATICS STUDIES
100,Clock [illegible]
T.P 021 222 2831



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய தே

## தேசம் போற்றும் தெல்லிநகர் துர்க்கை அம்பாள் திருத் தேர் காண வாரீர்



துதிப்போர்க்கு துன்பம் துடைக்கும் துர்க்கை அம்பாளின் அற்புத திருத்தேர்த்திரு விழாக் காண அனைவரும் ஒன்றுகூடும் நன்நாள் இன்று. பல்லாயிரம் பக்தர்கள் மத்தியில் அம்பாளின் அழகுத்தேர் ஆடி அசைந்து வரும் காட்சி அகங்குளிரவைக்கும். தேசம் போற்றும் தெல்லிநகர் துர்க்கை அம்பாளின் பக்தர்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் விரதம் அனுட்டித்து போற்றும் திருநாள் இன்று. இப்புனிதத் திருத்தலத்தில் அம்பாளின் திருவருளோடு பல்வேறு அறப்பணிகள் நடைபெறுவது சைவத்துக்குச் சிறப்பானதொன்றாகும். ஆதரவற்றவர்களை நேசிப்பது தெய்வகாரியம் எனத் தன் பணி நிலை நாட்டியவர் அன்னை சிவத்தமிழ்ச் செல்வி அம்மா அவர்கள். அன்னையின் ஆளுமையால் இத்திருக்கோயிலை உலகப் பெருமையோடு போற்றியது. அவரது வழிகாட்டல் இன்று இத்திருத்தலத்தை நன்முறையில் பரிபாலிக்க உதவுகிறது என்றால் மிகையாகாது. அன்னை நெறிப்படுத்திய வழியில் தேவஸ்தானத் திருப்பணிகளும் சமூகப் பணிகளும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. கடந்த் ஒரு வருட காலப்பகுதியில் எமது தேவஸ்தானம் பின்வரும் பணிகளை நிறைவேற்றியிருப்பது சிறப்புக்குரியது.

1. துர்க்கை அம்பாளின் புதிய திருமஞ்சத் திருப்பணி.
2. துர்க்காதேவி இலவச சித்த ஆயுள்வேத வைத்தியசாலை திறக்கப்பட்டமை:
3. சிவத்தமிழ்ச் செல்வி அன்னை நினைவாலயம் - நவகோண அமைப்பில் அன்னையின் அஸ்திப் பேழையின் மீது கட்டப்பட்டுள்ளது.
4. சிவத்தமிழ்ச் செல்வி அன்னையின் திருவுருவச் சிலை திருக்கோயில் வீதியில் நிறுவப்பட்டமை.
5. தெல்லிப்பழை கட்டுப்பிட்டி மயானத்தில் அன்னை நினைவாக வைரவர் ஆலயம் கட்டப்பட்டமை.
6. திருஞானசம்பந்தர் தேவாரம் முதலாந் திருமுறை வெளியிடப்பெற்று சைவ ஆலயங்களுக்கு, நிறுவனங்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டமை.
7. வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து முகாம்களில் வசிக்கும் மக்களுக்கு பொருள்கள், மருத்துவ சேவைக்கு பல லட்சம் ரூபா உதவி வழங்கியமை.
8. முகாமில் வசிக்கும் கற்பிணித் தாய்மாருக்கான காலை உணவு வழங்கும் சேவை.
9. ஆலயத்தில் புதிதாக பாலமுருகன் சுவாமி விக்கிரகம் கும்பாபிஷேகம் செய்யப்பட்டமை.



போன்ற முக்கிய பணிகள் நிறைவேற்றப்பட்டமை திருவருளே. தொடர்ந்து ஏழை மாணவர் உதவி, துர்க்காபுரம் மகளிர் இல்லப் பணிகள் யாவும் நன்முறையில் நடைபெற்று வருகின்றன. எவ்வித குறையுமின்றி துர்க்கை அம்பாளின் அருட்கடாட்சத்தாலும் அம்பாளின் அடியவர்களின் பேருதவியாலும் தேவஸ்தானப் பணிகள் குறை வின்றி நிறைவாக நடைபெற்று வருகின்றன. தேவஸ்தான நிர்வாக சபை உறுப்பினர்கள், தேவஸ்தானப் பணியாளர்கள், தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம், துர்க்காபுரம் பெண்கள் தொண்டர்சபை, துர்க்காபுரம் மகளிர் இல்லம் அனைவரது ஒத்துழைப்புடன் எமது தேவஸ்தானம் சிறப்பாக இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. இப்புனித கைங்கரியம் சிறக்க இந்நாளில் பிராா்த்திப்பதோடு அன்பர்கள் அனைவருக்கும் இந்நாளில் அம்பாளின் நல்லருள் கிடைக்கப் பிரார்த்தித்து அமைகிறேன்.

*'அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்'*,

*ஆறு.திருமுருகன், தலைவர் - துர்க்கா தேவி தேவஸ்தானம்.*

## அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்



இன்று தெல்லிநகர் துர்க்கை தேரேறி வருகிறாள் அடியார்கள் உளங்களிக்க, உடல்களிக்க உயிர் களிக்கப் பவனிவரும் அன்னையின் அருட்காட்சி யைக் கண்டு ஆனந்தமடைவோமாக! ''என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே'' என்று இறும் பூதடைவோமாக எங்கள் உன்னத தேரிலும் அன் னையை ஏற்றி வைத்து பக்தி மலர்தூவி பரவிப் பணிவோமாக.

(03.09.1998 ஆம் ஆண்டு தேர்த் திருவிழாவிற்கு கொடுத்த ஆசியுரை)

அமரர் தங்கம்மா அப்பாக்குட்டி, தலைவர் ஸ்ரீ துர்க்கா தேவஸ்தானம்.

## ஆசியுரை



உலகத் தாயாகிய துர்க்காதேவியின் தேர் உற்ச வம் இன்றாகும். ''துர்க்க விமோ கினி'' என்றும் சிறப்பு நாமம் கொண்ட எம் பெருமாட்டி தேரேறி வந்து எங்களின் துக் கங்கள், துயரங்களை அழித்து அல்லலுறும் அடியார்களுக்கு சுகபோகங்களை வழங்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம்.

சிவஸ்ரீ. சு. செந்தில்ராசாக் குருக்கள்
மகோற்சவகால சிவாச்சாரியார்.

## சாந்தியும் சமாதானமும் அருளட்டும் அம்பிகை



ஆதி சக்தியின் அம்சமும், முப்பெரும் தேவியிலே முதல் தேவியாக விளங்குகின்ற ஸ்ரீ துர்க்கா தேவியின் இரதோற்சவ நாளாகிய இன்றைய நாளிலே அகிலமதில் வாழ்கின்ற அனைத்து இன மக்களும் சாந்தி சமாதான மாக எல்லாச் சிறப்புக்களும் பெற்று, அம்பிகையின் திருவருளோடு நலமாக வாழ நல் லாசி கூறி பிரார்த்திப்போமாக.

வா.அகிலேஸ்வரக் குருக்கள்.
(பிரதம சிவாச்சாரியார்) ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
துர்க்காபுரம், தெல்லிப்பழை.


new Fashion Park
Wholesale & Retail Dealers in: Textiles specialist in wedding Sarees and Salvars.
82, K.K.S. Road, Chunnakam. T.P: 021 2240012

காலத்துக்கேற்ற வகையில் புதிய டிசைன்களில் 22 கரட் தங்க நகைகளை பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்
ஜெயதுர்க்கா
நகைத் தொழிலகம்
ஸ்ரேசன் றோட், மல்லாகம்.

சகல விதமான உணவு வகைகளையும் குறித்த நேரத்தில் ஓடருக்குப் பெற்றுக்கொள்ள
சயன் உணவகம்
உரிமையாளர்: ரவி
மல்லாகம் சந்தி, மல்லாகம்.

ஆனந்தி சிற்பாலயம்
பாம் அன்கோ
துர்க்காபுரம், தெல்லிப்பழை.

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)
நுகர்ச்சிப் பொருள்கள் விற்பனை, புடைவை விற்பனை நிலையம், பாதணி விற்பனை நிலையம் கூட்டுறவு நகர், கிராமிய வங்கிச் சேவை, ஐசுபி பழத் தொழிற்சாலை உற்பத்திப்பொருள்கள் (நெல்லிரசம், திராட்சைக் கோடியல், கோடியல், ஜாம், ஊறுகாய், மோர் மிளகாய்)
சிற்றுண்டிச் சாலை
கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.

மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாய விலையில் பொருள்களைப் பெற்றுக்கொள்ள
துவாரகா
பல்பொருள் வாணிபம்
உரிமையாளர்: பரமேஸ்வரன்
கே.கே.எஸ்.வீதி, மல்லாகம்.

Anna OHO Jeevakarama
உடனடிச் சத்துணவு
அன்னா தொழிலகம்
இணுவில்.

Fashion Motors
யாழ்.வீதி, மானிப்பாய்.

சிறி நந்தியா நகை மாளிகை அன் டிஜிற்றல் கலர் லாப்
இல.01, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 2709
இல.56, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 6744
இல.108A, லக்சன் பிளாசா கட்டடம் நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 8412

சுந்தர்சன்
மின்சார உபகரணங்கள் விற்பனையாளர்கள்
யாழ்.வீதி, மானிப்பாய்.

சகல விதமான கட்டடப்பொருள்களையும் நியாய விலைக்கு குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ள
ரமணன்
கட்டடப் பொருள் விற்பனை நிலையம்
525, 528, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம், 021 222 9296.

வர்ண உலகின் புரட்சி
Multilac
கந்தவேலன்
வர்ணவங்கி
110, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 2822

பால், பால் உற்பத்திப் பொருள்கள், பசு நெய், கேக் வகைகள் ஓடருக்கு குறித்த காலத்தில் தரப்படும். லான்ட்ஓ லேக் நிறுவனத்தின் அனுசரணையுடன் கொதிக்க வைத்த பால் உடனுக்குடன் பெற்றுக்கொள்ளலாம்.
ஜனா பாம்
இல.7, மத்திய சந்தை, மல்லாகம்.

ஸ்ரீ முருகன்
பல்பொருள் வாணிபம்
சகல பொருள்களும் நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
பிரதான வீதி, சங்கானை.

பாடசாலை உபகரணங்கள், புத்தகங்க யாசப் புத்தகங்கள், நாவல்கள் அனை மொத்தமாகவும் சில்லறையாகவும் கொள்ள நாடவேண்டிய இடம்
ஸ்ரீ லங்கா புத்தகசா
244, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பா
தொ.பே: 021 222 2573

அசோக்
தொழிற்சாலை
கே.கே.எஸ்.வீதி,
சுன்னாகம்.

நதீஸ்
கிறீம் கவுஸ்
Dr.சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

அல்டிமேட்
டிஜிற்றல் வீடியோ அன் போன் சொப்
யாழ்.வீதி, மானிப்பாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்த் திருவிழா சிறப்பு மலர் - 01.09.2009

## தெல்லிநகர் துர்க்கை அம்பாள் இன்று சித்திரத் தேரிலே பவனி வருகிறாள்



வரலாற்றுப் பெருமையும், வழிபாட்டுப் பெருமையும் கொண்ட தெல்லிப்பழை துர்க்கை அம்பாள் தேவஸ்தான வரலாறு புராதனமானது. துர்க்கை அம்பாள் சங்கு, சக்கரம் ஏந்திய திருக்கரங்களோடு சர்வ உலக மக்களையும் காப்பற்றி வருகின்றஓர் அற்புதத் தெய்வம்.

தெல்லிப்பழை என்ற இடப்பெயருக்குக் காரணம் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் கட்டுவதற்கு வந்த மாருதப்புரவீகவல்லி தங்கி இருந்த இடம் எனக் கொள்ளப்படுகின்றது. தெல்லிப்பழைக் கிராமம் பற்றிய பல செய்திகளுக்கு ஈழமண்டல சதகம் நூல் சான்று தருகின்றது. அத்துடன் சட்டத்தரணி தெல்லிப்பழை வ.குமாரசாமி அவர்கள் துர்க்கை அம்மன் பற்றிய வரலாறுகளை 1935 ஆம் ஆண்டில் எழுதிச் சென்னையில் வெளியிட்டுள்ளார்கள். மாவைக் கந்தப் பெருமான் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயிலுக்கு விஜயதசமி அன்று மாணம்பூ உற்சவத்திற்கு வருகை தரும் வழமை பாரம்பரியமானது.

துர்க்கை அம்பாளை நினைக்கின்ற போது தமக்கென தொண்டு ஆற்ற அம்பாளிடம் இருவரைப் பெற்றோம். ஒருவர் ஆலயபரிபாலனத்தை தனிமுகா மைத்துவத்தில் இருந்து பொதுமக்கள் பரிபாலனம் செய்ய சபையை நிறுவி தர்மசாதனம் செய்த பெரு வள்ளல் சைவப்பெரியார் நாகநாதர் அவர்கள். மற்றையவர் இந்த நூற்றாண்டின் சைவத் தமிழ் மக்களின் ஆன்மீக வழிகாட்டி ஏகப்பிரதிநிதி சிவத்தமிழ்ச் செல்வி அம்மா. தேவஸ்தான வளர்ச்சிப் பணியை அரை நூற்றாண்டுக்கு மேற்பட்ட காலம் தன்நிகரில் லாத தனிப்பெருந் தலைவியாக தொண்டாற்றி பொற்காலம் அமைத்தவர். அம்மாவின் பணிகள் யாவும் அனைவரும் அறிந்ததாகும். மங்கையர்க்கரசியாரைப் போல மனோதிடமும், திலகவதியாரைப் போல தியாக சிறப்புக்களையும் கொண்டவர் சிவத்தமிழ் செல்வி அம்மா.

அம்மா அவர்கள் தமது "கணீர்" என்ற குரலினால் சைவ சமூகத்தையும், தமிழ் சமூகத்தையும் சுற்றமாகக் கொண்டவர். இவர் தமது தலைமைப்பதவி பெற்றவுடன் ஆரம்பித்த திருப்பணி சித்திரத்தேர்த் திருப்பணி. சித்திரத் தேரின் வெள்ளோட்ட விழா 1978 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் நான்காம் திகதி மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இந்தச் சித்திரத்தேரை உருவாக்கிய சிற்பச்சக்கரவர்த்தி கலாகேசரி ஆ.தம்பித்துரை அவர்களை நினைவு கூராமல் இருக்க முடியாது. இவர் ஈழநாட்டில் உள்ள பல கோயில்களில் பெருந்தேர்களை உருவாக்கிய பெருமைக்குரியவர்.

சித்திரத் தேர் திருப்பணி ஆரம்பமாகிய வேளை யில் சிவத்தமிழ்ச்செல்வி அம்மா அவர்களுக்கு பக்கபலமாக நின்றவர்கள் பலர். இவர்கள் அனைவரும் அம்மா அவர்களின் திருப்பணிக்குத் தோளோடு தோள் நின்றவர்கள். அம்மா அவர்களின் வலதுகரங்க ளாக நின்றவர்களில் ச.ஆறுமுகநாதன், ஆ.க.கணேசரத்தினம், க.தணிகாசலம், த.பொன்னம்பலம் என்பவர் களைக் குறிப்பிடலாம். சித்திரத்தேர் சிறப்புற மலேசியா, சிங்கப்பூரில் இருந்து வர்ணப்பூச்சு மைகளை தெல்லிப்பழைக்குப் பாதுகாப்பாகக் கொண்டுவர உதவிக்கரம் நீட்டியவர் பரோபகாரமணி கே.கே. சுப்பிரமணியம் அவர்கள் எனக் குறிப்பிடும் போது காரைநகர் பெருமை கொள்கின்றது.

தேர்விழா ஒரு சமுதாய மேம்பாட்டுவிழா. தேரின் தத்துவம் கீழ் ஏழு உலகம், மேல் ஏழு உலகம் அண்டத் தோடு ஒப்பிட்டு விசாரம் செய்யப்படுகின்றது. தேரில் அமைந்துள்ள சிற்பக்கலை, ஓவியக்கலை, கவின் கலை என்பன சைவமக்களின் வாழ்வோடு கலந்தவையாகும்.

சிவத்தமிழ்ச் செல்வி அம்மா சமுதாய வெள்ளத்தில் புகுந்து தம்பணிகளால் பெருமை பெற்றவர். சமுதாய சேவையை குற்றம் இல்லாத பணியாகச் செய்து உலகினால் நேசிக்கப் பட்டு நாநிலம் போற்றிய சிவத்தமிழ்ச் செல்வி அம்மாவை நாம் இழந்த ஆண்டு இந்த ஆண்டு. இவ் வாண்டிலே நடைபெறுகின்ற சித்திரத் தேர் விழாவில் அம்பாளை வழிபடுவோம். கொற்றவைத் தெய்வமாகிய துர்க்கை அம் பாள் நம் நாட்டுக்கு அமைதிதர அம்பாளை வேண்டிப் பிரார்த்திப்போமாக.

- கா.சிவபாலன்

### தேரேறி வந்தெமைக் காத்தருள்வாய் தாயே!

தெல்லியம் பதி யெனும் நகரதனில்
தேசுறும் துர்க்கா புரத்தினிலே
அல்லிமென் விழியாள் துர்க்கையன்னை
ஆடியே தேரினில் வருகின்றாள்

வெற்றிக் கீதம் திசையெட்டும்
வேட்கையுடன் தினம் ஒலித்திடவே
குற்றம றுத்தெமை ஆண்டருளும்
குணம் மிகு துர்க்கை வருகின்றாள்

பக்தர்கள் வடங்களைத் தொட்டிழுக்க
பாவவி னைகளும் உடனகல
துக்கம் தனையறுத் தெமையாளும்
துர்க்கையே தேரினில் வருகின்றாள்

அன்னையின ருளினில் தினம் மூழ்கி
அகப்பிணி யாவும் தொலைந்தோட
நன்றெமை யாளும் விஷ்ணு துர்க்கை
நாடிம ணித்தேரில் வருகின்றாள்

சு. குகதேவன், தெல்லிப்பளை.

### தேரேறி வருகின்றாள் எங்கள் துர்க்கை அம்மா

ஆவணியில் தேரேறி வருவாயம்மா!
ஆறுதலை தந்தெமையும் ஆள்வாயம்மா!
உவகையுற எமை வாழ வைத்தாயம்மா
உயர்தெல்லி ஊரமர்ந்த துர்க்கையம்மா,
புவனம் எங்கும் உன் புகழே பாடிப்பாடி
புகழுடனே திசை எட்டும் வாழும் மைந்தர்
தவமான தெல்லி இந்து இளைஞர் நாமும்
தேசுடனே உன் புகழைச் சொல்வோம் அம்மா!

இந்து இளைஞர் சங்கம், தெல்லிப்பளை.


ஜெயா
கல்லுடைக்கும் ஆலை
உரிமையாளர்: ஜெயராஜ்
கே.கே.எஸ். வீதி, தெல்லிப்பழை.

துர்க்கா
கல்லுடைக்கும் ஆலை
கே.கே.எஸ்.வீதி, தெல்லிப்பழை.

பாடசாலை உபகரணங்கள், சப்பாத்து, பாக், என்பவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
மது பான்ஸி ஹவுஸ்
யாழ்.வீதி, மானிப்பாய்.
தொ.பே: 021 222 7543

சன்யோ
கோப்பி அன் கூல்பார்
இல. 16, நவீன சந்தை, சுன்னாகம்.

தெல்லிப்பழை பல நோ.கூ.சங்கம் (வ-து) கூட்டுறவு நகர்
★ கிராமிய வங்கிச் சேவை
★ சுயதொழில் கடன்
★ விவசாய சேவை
★ இரும்பு விற்பனை நிலையம்
★ மின் புனரமைப்புச் சேவை
★ கூட்டுறவு கல்வி அபிவிருத்தி
★ வாகன சேவை
★ நுகர்ச்சிச் சேவை
★ சிற்றுண்டிச் சாலை
★ நிழற் பிரதி சேவை
★ கட்டட ஒப்பந்த வேலை
★ தொலைத் தொடர்பு சேவை
★ புடவை விற்பனை நிலையம்
★ கூட்டுறவு நகர்
பதிவு இல.ஒ/1558/12.03.1971
உள்நாடு: 021 222 3053, 021 222 3054
வெளிநாடு: 0094 - 212223053, 0094 - 212223054, 060 -2212341
துர்க்காபுரம், தெல்லிப்பழை.

Modern PCS Systems
18, K.K.S. Road, Chunnakam

New Micro Computer Systems
Computer Education
No:30,Maun Street, Chankanai, Jaffna . T.P: 0602210727

ஆசைப்பிள்ளை
அன் சன் நகைமாடம்
22 கரட் தங்க நகைகள் விரும்பிய டிசைன்களில் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் செய்துகொடுக்கப்படும்.
இல.10, பஸ் நிலையம் முன்பாக, சங்கானை.

ஹைய் ரெக்
எலக்ரோனிக்ஸ் அன் போன் சொப்
கையடக்கத் தொலைபேசி திருத்தலும் விற்பனையும்
இல.53, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.

Glory
Aluminium Enterprises
96A, kasthuriar Road, Kannathidy Junction, Jaffna.
T.P: 0770759641.

நவீன முறையில் அழகிய டிசைன்களில் 22 கரட் தங்க நகைகளைபெற்றிட
எம்.ரீ.எஸ். நகைத் தொழிலகம்
இல.42, Dr.சுப்பிரமணியம் வீதி, யாழ்ப்பாணம்.

Harrees Enterprise
No: 110,K.K.S. Road, Chunnakam
T.P: 021 2240118

தாட்ஷா
மல்ரி பொயின்ட்
மகாராஜா கட்டடம்
சுன்னாகம் சந்தி, சுன்னாகம்.


தாஸ் லாப்
இல.04, Dr. சுப்பிரமணியம் விதி, சுன்னாகம் சந்தி, சுன்னாகம்.

மங்கை
பட்டுச்சோலை
இல.A8, நியூ மார்க்கட், சுன்னாகம்.

சுன்னாகம் நகரில்....
வட்டி இன்றிய மாதாந்த தவணைமுறையில் குறைந்த விலையில் கூடிய கால உத்தரவாதத்துடன் மின்னியல் சாதனங்களைப் பெற்றிட
Abans காட்சியறை
160A, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய நினைவுகளில் நீங்காத ஓராண்டு



'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்'

## அமரர் திருமதி
## சிவகாமி மகாதேவன்

( ஓய்வு பெற்ற தபாலதிபர், முன்னாள் அறங்காவலர் -
நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம்)

ஓர் ஆண்டு என்ன ஓர் ஆயிரம்
ஆண்டுகள் சென்றாலும் உம்து அளப்பரிய
சேவை, அன்பு, பாசம் பரிவு எம் இதயத்தில்
இருந்து என்றும் நீங்கவே நீங்காது. மேலும் மேலும் உங்கள் மேல்
அன்பு பெருகிக்கொண்டு போகின்றதேயொழிய
குறைவதாகவில்லை. என்றும் நீங்கள் எங்களைவிட்டு பிரிந்ததாக
நினைக்கவும் இல்லை.அப்படி நினைக்க முடியவும் இல்லை.
கோடி அம்புகள்கொண்டு இதயத்தைத் துளைத்தது போன்று
கொடூரமான தல்லவா உங்கள் பிரிவு. ஆனால் சாவுகள்
தவிர்க்கமுடியாதவைதான். என்றாலும் உங்கள் சாவு
சகிக்கமுடியாதது. ஆறுதல் சொல்ல யார் யார் இருந்தென்ன
உங்கள் ஆசை அன்புக்கு ஈடாகுமா? தேறுதல் சொல்வதற்கு
தெய்வமே வந்தாலும் உங்கள் திருமுகம் ஒருதரம் காண்பதற்கு
இணையாகுமா? நீங்கா உங்கள் நினைவுகள் நிலையாக எங்கள்
உள்ளங்களில் நிலைத்து நீடித்து நிழல் போல்
நிற்கின்றன. ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
அம்மா என்று அழைக்க நீங்கள் இல்லையே.
ஆண்டு ஒன்று சென்றாலும் ஆறவில்லையே
அம்மா உன் துயரம்
எம்மனதில்.

கணவர்- மகாதேவன்,
மகன்-சத்தியசீலன் (கணக்காளர்),
*MSR Group LTD* - உரிமையாளர் ,
UK.
T.P: 00442085142678,
7809399546.
*www.msraccounting.com*

நயினாதீவு-03
**0778177706, 0602210499.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுன்னாகம் பொலிஸ் பிரிவில் பொதுமக்கள் பயமின்றி நடமாடக்கூடிய சூழல் உருவாக வேண்டும்

## அனைவரதும் ஒத்துழைப்பும் தேவை என்கிறார் பொறுப்பதிகாரி லுடாவை

யாழ்ப்பாணம், செப்.1

சுன்னாகம் பொலிஸ் நிலையப்பகுதியினுள் பெண்களும் இரவில் பயமின்றி நடமாடக்கூடிய சூழ்நிலை ஏற்படவேண்டும்.

அதற்குப் பொதுமக்களும் கிராம அலுவலர்களும் முழுமையாகத் தமது பங்களிப்பைப் பொலிசாருக்கு வழங்க வேண்டும்.

மேற்கண்டவாறு சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லுடாவை கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

அண்மைக்காலத்தில் குற்றச் செயல்களின் தன்மை அதிகரித்துக் காணப்படுகின்றது.

குறிப்பாகப் பெண்கள் தங்க நகைகளுடன் நடமாட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள்களில் வரும் ஒரு குழுவினரால் தங்க நகைகளை அபகரித்துச் செல்லும் நிலைமை காணப்படுகின்றது. இத்தகைய நிலைமை தொடர்ந்து இடம்பெற அனுமதிக்க முடியாது.

திருட்டுக்கள் நடைபெற்ற இடங்களில் விசாரணைகளை மேற்கொண்டால் உரிய விபரங்களை சம்பவத்தை நேரில் கண்டவர்களும் வழங்க மறுத்து வரு கின்றார்கள்.

இத்தகைய பிழையான எண்ணங்கள், சிந்தனைகள் மூலம் பாதிக்கப்படுபவர்கள் பொதுமக்களாகவே காணப்படுகிறார்கள்.

உண்மையில் கண்ட தகவல்களை பொதுமக்கள் பொலிசாருக்கு வழங்கி உதவ வேண்டும்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குற்றச் செயல்கள் சம்பந்தமாகத் தரப்படும் தகவல்கள் வெளியிடப்படமாட்டாது.

பொதுமக்கள் குற்றச் செயல்களை ஒழித்து நிம்மதியாகவும் சமாதானமாகவும் வாழ்வதற்குப் பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியமாகும்.

கிராம அலுவலர்களும் தமது பகுதியில் வாழும் மக்களில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

அவர்களின் செயல்பாடுகள் வாழ்க்கை முறைகளைக் கண்காணித்து உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் -என்றார். (203- 86)

# இளைஞர் யுவதிகளுக்கு தென்மராட்சியில் பயிற்சிகள்

யாழ்ப்பாணம், செப்.1

இலங்கை தொழில்பயிற்சி அதிகார சபையினர் தென்மராட்சிப் பிரதேச இளைஞர் யுவதிகளுக்கான பின்வரும் பயிற்சி நெறிகளை விரைவில் ஆரம்பிக்கவுள்ளனர்.

தோல் பொருள்கள் உற்பத்தி, மர வேலை, கணனி வன்பொருள் ஆகிய பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

பிரதேசத்தைச் சேர்ந்த 18 இற்கும் 35 இற்கும் இடைப்பட்ட வயதினையுடைய ஆண், பெண் இருபாலாரும் தமது சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பங்களைப் பிரதேச செயலக தொழில் பயிற்சிப் பிரிவுக்கு விண்ணப்பிக்குமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (203-207)

# யாழ் நகரில் உணவு கையாளும் நிலையங்களில் பண்டங்களின் விலைகள் குறைவடையவில்லை

## செயலகம் நடவடிக்கை எடுத்தும் நடைமுறையிலில்லை

நல்லூர், செப்.1

யாழ். நகரில் உள்ள உணவு நிலையங்களில் உணவுப் பண்டங்களின் விலைகளைக் குறைப்பதற்கு யாழ். செயலகத்தால் நடவடிக்கை எடுத்திருந்த போதும் அதற்கு அமைவாக விலைக்குறைப்புக்கள் இதுவரை நடைமுறைப்படுத்தப் படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

பால் தேநீர் ஒன்றின் விலை 18 ரூபாவிலிருந்து 20 ரூபாவாகவும் வடை பெரிது 18 ரூபாவிலிருந்து 20 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றது.

அதே போன்று றோல் விலைகளில் மாற்றம் செய்யப்பட்டது. எனினும் செயலகத்தால் விற்பனை செய்ய வேண்டும் என நிர்ணயிக்கப்பட்ட விலைகளை நடைமுறைப் படுத்தப்படவில்லை.

தற்போது பொருள்களின் விலைகள் ஓரளவு குறைவடைந்து காணப்படுகின்ற போதிலும் உணவுப் பண்டங்களின் விலைகளில் மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றும் கூறப்படுகின்றது.

மதிய உணவுகளும் இடத்துக்கு இடம் மாறுபட்டவிலைகளில் விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் சுட்டிக் காட்டப்படுகின்றது. (203-111)

# பண்ணைப்பாலப் புனரமைப்புப் பணிகள் உரியமுறையில் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை

## போக்குவரத்துச் செய்வதில் மக்கள் சிரமம்

நல்லூர், செப்.1

பண்ணைப் பாலம் புனரமைக்கும் பணிகள் இன்னமும் உரிய முறையில் ஆரம்பிக்கப்படவில்லை.

இந்தப் பாதையால் யாழ்.நகரில் இருந்து தீவுப் பகுதிக்குச் செல்லும் அனைத்து வாகனங்களும் பலதரப்பட்ட சிரமங்களை இதனால் எதிர்நோக்குகின்றன என்று வாகனச் சாரதிகளும் தீவுப்பகுதி மக்களும் கூறுகின்றார்கள்.

'நிஷா' வெள்ள அனர்த்தத்தினால் பண்ணை பாலம் சேதமடைந்து ஒரு வருடங்களுக்கு மேலாகிவிட்டது.

மிகவும் முக்கியமான இந்த வீதி புனரமைக்க முழுமையான ஏற்பாடுகள் எதுவும் இடம்பெற்றதாக இல்லை.

வீதியின் இருமருங்குகளும் மிகவும் மோசமான சேதத்திற்கு உள்ளாகியுள்ளன.

இதனால் வாகனங்கள் ஒன்றையொன்று விலகிச் செல்லமுடியாத நிலை வீதியின் பலபகுதிகளில் உள்ளதாகவும் இனிவரும் மழைகாலத்தில் கூடுதலான கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் எனவும் பொதுமக்கள் கூறுகின்றார்கள்.

வடக்கின் வசந்தம் அபிவிருத்தி திட்டத்தில் இந்த வீதிக்கு முன்னுரிமையளித்து முழுமையாக அதைப் புனரமைக்க விரைந்து நடவடிக்கை எடுக்க அதிகாரிகள் முன்வர வேண்டும் என மக்கள் கேட்டுள்ளனர்.

இந்த வீதியின் முதல் ஒரு கிலோ மீற்றர் தூரத்தைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (203-111)

# இலங்கை ஆயுள்வேத சபையினால் 'வடக்கின் வைத்தியவர்ணம்' நடமாடும் சேவை

## கைதடி ஆயுள் வேத வைத்தியசாலையில் மூன்று நாள்களுக்கு

யாழ்ப்பாணம், செப்.1

இலங்கை ஆயுள்வேத வைத்திய சபையினர் 'வடக்கின் வைத்திய வர்ணம்' என்னும் நடமாடும் சேவையினை எதிர்வரும் 4ஆம் 5ஆம் 6ஆம் திகதிகளில் கைதடி ஆயுள்வேத வைத்தியசா லையில் நடத்தவுள்ளனர்.

இதுவரை பதிவு செய்யப்படாத அனைத்து பாரம்பரிய வைத்தியர்களுக்கான நடமாடும் சேவைகள் நான்காம் திகதி மாலை 11 மணி தொடக்கம் மாலை 4 மணி வரையும்-

பாரம்பரிய வைத்தியர்களைப் பதிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சையும் நடமாடும் சேவையும் ஐந்தாம் திகதி காலை 8.30 மணி தொடக்கம் பி.ப 4 மணி வரையும்-

சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு ஆறாம் திகதி பிற்பகல் ஒரு மணி தொடக்கம் இடம்பெறுமெனவும் ஆயுள்வேத வைத்தியசாலைத் தலைவர் திருமதி ஆர்.பி. டபிள்யு குணவர்த்தன அறிவித்துள்ளார்

பதிவு செய்யப்பட்ட ஆயுள்வேத வைத்தியர்களுக்குச் சட்டபூர்வமான ஆயுள்வேத மருத்துவ சான்றிதழ், புத்தகங்கள் விநியோகித்தல் ஆயுள்வேத கலை இலட்சனையுடன் கூடிய அடையாள அட்டை விநியோகித்தல் போன்றவையும் இடம்பெறும்.

பதிவு செய்யப்படாத பாரம்பரிய வைத்தியர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடத்தல், 70 வயது தாண்டிய இதுவரை பதிவு செய்யாத வைத்தியர்களைப் பதிவு செய்வது 'ஹல வெத ராகவரண' ஓய்வூதியத் திட்டத்தில் இணைப்பது போன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் எனவும் அறிவித்துள்ளார். (203-207)

# உதவிப் பிரதேச செயலர் இடமாற்றம்

யாழ்ப்பாணம், செப்.1

தென்மராட்சிப் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் திருமதி அ. காந்தசீலன் யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்திற்கு கடந்த 24 ஆம் திகதி தொடக்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவரின் இடத்திற்கு மாகாண விவசாய அமைச்சில் கடமையாற்றிய செல்வி ர. நவரத்தினம் நியமிக்கப்பட்டுப் பிரதேச செயலகத்தில் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். (203- 207)




# சந்நிதியான் ஆச்சிரமத்தில் ஆன்மீக நிகழ்வுகள்

வடமராட்சி, செப்.1

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய பெருந்திருவிழாவை ஒட்டி சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக நிகழ்வு வரிசையில் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் 'திருப்புகழுக்கு ஆசை கொண்டோம்' என்ற தலைப்பில் வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலய அதிபர் ஆ. சிவநாதனின் சொற்பொழிவு இடம் பெறும்.

நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு 'அலங்காரம்' என்ற தலைப்பில் செஞ்சொற்செல்வர் இரா. செல்வவடிவேல் சொற்பொழிவு நிகழ்த்துவார். (203-236)

# கரித்தாஸ்- கியூடெக் நிறுவனத்தின் நிதியுதவியுடன் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 43 மில்லியன் ரூபா செலவில் 51 வீடுகள்

யாழ்ப்பாணம், செப்.1

கரித்தாஸ்-கியூடெக் நிறுவனத்தின் நிதியுதவியுடன் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 51 வீடுகள் 43 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளன.

கரித்தாஸ்- கியூடெக் நிறுவனத்தின் இயக்குநர் அருட்திரு.சி.ஜி.ஜெயக்குமார் அடிகளார் இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் போரினால் பாதிப்புற்று மிகவும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்கள் பிரதேச செயலர், கிராம உத்தியோகத்தர் ஊடாகப் பயனாளிகள் தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம் 51 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு தலா 8.5 லட்சம் ரூபா செலவில் வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

வீடுகள் அமைக்கப்பட்டதன் பின்னர் மின்சார இணைப்புகள் வேலைகள் நிறைவு பெற்றதும் வீட்டு உரிமையாளர்களிடம் அவை சம்பிரதாயபூர்வமாகக் கையளிக்கப்படும்.


பெரும்பாலும் 3 மாத காலப்பகுதியில் இந்த வீடுகள் அமைக்கும் பணிகள் நிறைவுபெறும் - என்றார் அவர். (50-9)

# தெல்லிப்பழைப் பிரதேச பயனாளிகளுக்குப் பால்மாடு

யாழ்ப்பாணம்,செப்.1

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் சுதந்திரபுரம் கிராமத்தில் ஐசாக் நிறுவனத்தால் நான்கு பயனாளிகளுக்குப் பால்மாடு வழங்கப்பட்டுள்ளது.

சுதந்திரபுரம் கிராமத்தில் ஜே/244 கிராம சேவையாளர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட நான்கு பயனாளிகளுக்கே பால்மாடு அண்மையில் வழங்கப்பட்டுள்ளதாக ஐசாக் நிறுவனத்தின் நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் ம.தினேஷ்குமார் தெரிவித்துள்ளார். (9)



யாழ்.செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற தமிழ் இலக்கிய விழாவுக்கான ஆலோசனைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட படங்கள். திருகோணமலை கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறையின் உதவிச் செயலாளர் கே.சிவகரன், யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், வடமாகாண பண்பாட்டலுவல்கள் உதவிப் பணிப்பாளர் என்.ஸ்ரீதேவி ஆகியோரையும் கலந்து கொண்ட அதிகாரிகளையும் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி வைத்தியசாலை வளாகத்தில் நிர்வாக அலகுக் கட்டடம்

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வளாகத்தில் 'நிக்கொட்' நிறுவனத்தினரால் நிர்மாணிக்கப்பட்டு வரும் நிர்வாக அலகுக் கட்டடம் செப்ரெம்பர் நடுப்பகுதியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

அத்துடன் வைத்தியசாலை வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் களஞ்சிய அறைக் கட்டடம், பெண்கள் விடுதி மற்றும் தண்ணீர்த் தொட்டிகள் ஆகியவையும் திறந்து வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (203- 207)

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



திருமதி சுப்பிரமணியம் கண்மணி

தோற்றம் 10-03-1912 மறைவு 12-09-2008

*திதி: பூர்வபக்கதுவாதசி 01.09.2009*

ஆண்டு ஒன்று அழிந்தாலும் - அழியாது
நாம் உம் மீது கொண்ட அன்பு

*என்றும் உங்கள் நினைவுடன்:*
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

8ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

(88227)

## அரசு-ஜே.வி.பி. ஆதரவாளர்கள் திஸ்ஸமஹராமயில் மோதல்!

**7 பேர் காயம்; அலுவலகம் சேதம்**

கொழும்பு, செப்.1

அம்பாந்தோட்டை, திஸ்ஸமஹராம பிரதேசத்தில் கட்சி ஆதரவாளர்களிடையே சனியன்று இடம்பெற்ற மோதலின்போது 7 பேர் காயமடைந்துள்ளனர் என திஸ்ஸ மஹராம பொலிஸார் தெரிவித்தனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆதரவாளர்களுக்கும், ஜே.வி. பியின் ஆதர வாளர்களுக்கும் இடையிலேயே இந்த மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, ஜே.வி.பியின் கட்சி காரியாலயத்திற்கு சேதம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவத்தில் காயமடைந்தவர்கள் தற்போது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (சி)

## விசேட கல்விச் செயலமர்வு

கோப்பாய், செப்1

ஊரெழு கணேச வித்தியாலயத்தில் விடுமுறை காலத்தில் ''முகிழ்வு'' விசேடகல்விச்செயற்பாடுகள் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவ் விசேட கல்விச் செயற்பாட்டில் 3இற்கும் மேற்பட்ட விசேடதேவையுடைய மாணவர்கள் பங்குபற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (203- 72)



அளவெட்டி நாகேஸ்வரம்
ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

**விசேஷ விழாக்கள்**

கொடியேற்றம் - 02.09.2009 புதன்கிழமை - மு.ப. 10.30 மணி
கைலாச வாகனம் - 09.09.2009 புதன்கிழமை - பி.ப. 6 மணி
சப்பறம் - 10.09.2009 வியாழக்கிழமை - மாலை 6.30 மணி
தேர் - 11.09.2009 வெள்ளிக்கிழமை - மாலை 10 மணி
உறியடி - 11.09.2009 வெள்ளிக்கிழமை - மாலை 6.30 மணி
தீர்த்தம் - 12.09.2009 சனிக்கிழமை - முற்பகல் 10 மணி
திருக்கல்யாணம் - 13.09.2009 ஞாயிற்றுக்கிழமை - பி.ப. 3 மணி

நாகேஸ்வரம்,
அளவெட்டி.

பொறுப்புரிமைப் பரிபாலனசபை. (88130)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் கணபதி கந்தையா

தோற்றம் 22-07-1928

மறைவு 19-07-2009

பாசமுடன் பரிவும் காட்டிய
பண்பின் சிகரமே!
நேசத்துடன் வாழ்ந்து மறைந்து விட்டீர்கள்
உங்கள் பிரிவைத் தாங்காமல் நாம்
துவண்டு கலங்கிப் போனோமே

தவசிகுளம்,
கொடிகாமம். (88219)

வேலாயுதம் குடும்பத்தினர் *(மருமகன்)*.

## 'கந்தசாமி' திரைப்படத்தை வாடகைக்கு விட்ட வீடியோக் கடை உரிமையாளர் கைது

வலி.வடக்கு.செப்.1

தற்போது திரையரங்குகளில் திரையிடப்பட்டுள்ள கந்தசாமி திரைப்படத்தின் இறுவட்டைத் தயாரித்து வாடகைக்கு விட்டதாகக் கூறி சுன்னாகம் பொலிஸாரினால் வீடியோக் கடை உரிமையாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மல்லாகம் சந்தியில் வீடியோக் கடை வைத்திருக்கும் ஒருவரே இக்குற்றச் சாட்டின் பெயரில் கைது செய்யப்பட்டவராவார்.

சுன்னாகம் பொலிஸாரினால் மல்லாகம் நீதிமன்றத்தில் குறிப்பிட்ட நபர் ஆஜர் செய்யப்பட்டதைத் தொடர்ந்து உரியவரை 25ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் 50 ஆயிரம் ரூபா இரண்டு ஆள் பிணையிலும் விடுவித்த நீதிவான் வழக்கு விசாரணையை வேறு ஒரு திகதிக்கும் வைத்துள்ளார். (1-86)

## வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் வறிய மாணவருக்கு கற்றல் உபகரணம்

கோப்பாய்,செப்.1

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்தி, சமூக அபிவிருத்தி மன்றத்தினரால் 110 வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2மணிக்கு கோப்பாய் சமுர்த்தி வங்கியிலும் நாளை மறுதினம் வியாழக்கிழமை அச்சுவேலி சமுர்த்தி வங்கியிலும் இந் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

ஒவ்வொரு மாணவருக்கும் தலா 2ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான உபகரணப் பொதிகள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (203-72)

## வாய்த் தர்க்கத்தில் பெண் காயம்

அச்சுவேலி,செப்.1

பெண்களுக்கு இடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் குடும்ப பெண் ஒருவரை வீடுபுகுந்து தாக்கி படுகாயமடையச் செய்தது. நெல்லியோடை, ஆவரங்காலில் நடைபெற்ற இச்சம்பவத்தினால் படுகாயமடைந்த திருமதி திலகராசா விஜிதா (வயது 37) அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்தச்சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸில் புகார் செய்யப்பட்டதை அடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (1-11)


# நாளை நீங்களும் ஓர் Civil Engineer...



edexcel INTERNATIONAL

BTEC HND in Civil Engineering

Leading to BSc. (Hons) / BEng. (Hons) ,UK

14 வருட நம்பகமும் சிறப்பும் மிக்க உயர்கல்விச் சேவை

New Batches Start On : 23-09-2009

பிரித்தானியாவின் Edexcel BTEC HND கல்விக்கு வட இலங்கையிலே தனித்துவம் மிக்க நிறுவனமாக இயங்கி வருகின்ற IIS City Campus நிறுவனம் முதன் முறையாக யாழ் மண்ணிலே குடிசார் பொறியியல் கற்கை நெறி ஒன்றினை ஆரம்பிக்கின்றது. பெற்றோர்களின், மாணவர்களின் கனவான சர்வதேச அங்கீகாரமுடைய பொறியியல் பட்டக்கல்வியினை யாழ் மண்ணிலேயே மேற்கொள்ளக் கூடிய ஓர் அரிய சந்தர்ப்பத்தை எமது நிறுவனம் ஏற்படுத்தித் தந்துள்ளது. A/L பரீட்சையில் இரண்டு பாடங்களில் சித்தியடைந்த எத்துறை சார்ந்த மாணவர்களேனும் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும் .

இரண்டு வருட கால இப்பொறியியல் கற்கைநெறியை IIS City Campus இல் முடித்த மாணவர்களுக்கு இறுதி இரண்டாண்டுக் கல்வியை பிரித்தானியாவில் உள்ள முன்னணிப் பல்கலைக்கழகத்தில் தொடரக் கூடிய சந்தர்ப்பத்தை IIS City Campus நிறுவனம் ஏற்படுத்தித் தந்துள்ளது. இக் கற்கைநெறியின் ஓர் சிறப்பம்சம் குடா நாட்டின் முன்னணிப் பொறியியலாளர்களின் விரிவுரைகளுக்கு பங்குகொள்ளும் ஓர் அரிய வாய்ப்பை பெற்றுக்கொள்வதாகும். இதன் மூலம் முதல் இரண்டாண்டை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு Edexcel நிறுவனத்தால் வழங்கப்படும் HND in Civil Engineering சான்றிதழும், இறுதி இரண்டு ஆண்டுகளை பூர்த்தி செய்த பின் குறிப்பிட்ட பல்கலைக்கழகத்தின் Civil Engineering பட்டக்கல்விச் சான்றிதழ்களையும் மாணவர்கள் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். அதுமட்டுமன்றி Engineering Council.UK பரீட்சைகளில் கணிசமாக விலக்களிக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இக்கற்கைநெறி எங்கள் தோழமை நிறுவனமான ICBT Campus உடன் இணைந்து நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். HND கற்கைநெறிக்கு தனித்துவம் மிக்க Edexcel "A" தரமுடைய IIS City Campus நிறுவனத்தில் இணைந்து கொள்வதனூடாக சிறந்த ஓர் எதிர்காலத்தை நீங்கள் உறுதிப்படுத்திக்கொள்ள முடியும் .

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் உங்கள் பதிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்.

IIS CITY CAMPUS
200, SIVAN PANNAI ROAD, JAFFNA.
Tel : 021 222 8060 Fax : 021 222 6933
Web : iiscitycampus.com Email : iiscc@sltnet.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NORTH LANKA IIT

SUCCESS MAKES PERFECT

Main Street, Chankanai. / #113, Laxan Plaza, Navalar Road, Jaffna.
Phone:- 0217390110 , 0602214305 Web:- www.northlankaiit.com
www.nliit.com

Partner Institution of


**Isles Internationale Université EU/Commonwealth & Nottingham College of London**

New Batch!

## B. Sc. in Computer Science

**Duration :- 1-3 Years**
**Qualification :- HND, A/L, O/L**


2^th Semester முடிவில்.... Cambridge Association of Managers - UK (Validated by UK Qualitity Assurance Commission and Endossed by Cambridge Acadamy of Management ) இனால் Diploma சான்றிதழ் வழங்கப்படும்.



4^th Semester முடிவில் ........ Cambridge Association of Managers - UK (Validated by UK Quality Assurance Commission and Endossed by Cambridge Acadamy of Management ) இனால் Advanced Diploma சான்றிதழ் வழங்கப்படும்.




6^th Semester முடிவில்..... Sri Lankan UGC அங்கீகாரமுடைய Degree சான்றிதழ் Isles Internationale Université Commonwealth இனால் வழங்கப்படும்.




**New Batches Start On 05/09/2009**

இவ் வருடம் பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு Cambodia ஜனாதிபதியினால் Cambodiaவில் பட்டமளிப்பு விழா 27 November 2009 இல் நடைபெறவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்

## B.Sc. in Multimedia - 1st Year

எமது நிறுவனத்திலும் 2ம், 3ம் வருடங்களை வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களில் பகுதி நேர வேலைவாய்ப்புடன் (மாதம் **$1500**) தொடரமுடியும்.

**யாழ் மாணவர்களுக்கு அரிய சந்தர்ப்பம்!**

சுமார் 60ற்கும் மேற்பட்ட மாணவர்களை வெளிநாடுகளுக்கு பகுதி நேர வேலைவாய்ப்புடன் அனுப்பியுள்ள **NOTTINGHAM COLLEGE OF LONDON DIRECTOR** யாழ் விஜயம்!

இவ்வரிய சந்தர்ப்பத்தினை உரியமுறையில் பயன்படுத்தி பயனடையுமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

*Excellent pathway for your future*

**Study in UK, Holland, Malta, New Zealand, Singapore**

## DIRECT ADMISSIONS AND INTERVIEW ON

**September 04th, 05th, 06th 2009 at North Lanka IIT, Jaffna, 09:30 AM TO 04:30 PM**

04/09/2009 - 05/09/2009 (9:30-4:30) North Lanka IIT யாழ் நிறுவனத்தில்

**Meet Mr. Karan**

06/09/2009 (10:00-4:00) யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில்

Come along with your Educational certificates (G.C.E (O/L), A/L, Diploma, Degree) certificates and copy of your passport.

**BENEFITS TO OUR CLIENTS**

↗ **Guidance by Lawyers, experienced professionals.** ↗ தவனை முறையில் கட்டணம் ↗ பகுதி நேர வேலை வாய்ப்பு ↗ இரண்டு மாதத்திற்குள் Resident Permit approval பெற்றுத்தரப்படும் ↗ ஆகக் குறைந்த தகைமை **G.C.E (O/L)** உடன் விண்ணப்பிக்கலாம் ↗ **Diploma / Advanced Diploma** உள்ளவர்களுக்கு Exemption வழங்கப்படும் ↗ **IELTS / TOEFL** தேவை இல்லை ↗ ஒரு வருடத்தின் பின் நீங்கள் விரும்பிய நாடுகளுக்கு கல்வியை தொடர முடியும் ↗ Type of Visa - Schengen.

***This can be overcome by appearing for a Language Ability Test at the venue at a cost of £ 20 (you will receive a certificate) & you will be eligible after passing the test for admission at certain universities & College!***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

INFORMATICS INSTITUTE OF TECHNOLOGY

UNIVERSITY OF WESTMINSTER

# Make your Dream a Reality



## Visit IIT Open Day

- For prospective students who wish to join the University of Westminster Internal Degree Programme in Jaffna
- For parents who wish to gain more information on the Degree Programme

Venue : 182, Brown Road, Jaffna
Date : Friday, 4th Sept 09'
Time : 9.00 am onwards

Speakers;
Assoc Prof. Alfred Perera
Prof. R. Sivachandran
Mr. Thusitha Kalpage

*For more information call;*
*021 222 1111, 0777 266075*

An Investment In Life


## சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், செப்.1

யாழ்.பல்கலைக்கழக கல்வியற் றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் த.கலாமணியின் ''பாட்டுத் திறந்தாலே'' சிறுகதைத் தொகுதியின் நூல் வெளியீட்டு விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தேவரையாளி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கலாபூஷணம் தெணியான் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வெளியீட்டுரையை கவிஞர் கொற்றை பி. கிருஷ்ணானந்தன் வழங்குவார்.

நூலின் முதல் பிரதியை சாவகச்சேரி பிரதேச செயலர் வே.சிவராஜலிங்கம் பெற்றுக் கொள்வார். (201)

## வழிகாட்டல் கருத்தரங்கு

இலங்கை திறந்த பல் கலைக்கழகச் சட்டமாணி நுழைவுப் பரீட்சை 2009 இற்கான வழிகாட்டல் கருத்தரங்கு நாளை புதன்கிழமை முற் பகல் 10 மணிக்கு திருநெல் வேலி செங்குந்த இந் துக் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

ஆர்வமுள்ளவர்களை 021 222 6236, 0777 246723 ஆகிய தொலை பேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (203)

## அதிபர்களுக்கான கூட்டம்

யாழ்ப்பாணம், செப்.1

தீவகக் கல்வி வலய அதிபர்களுக்கான கூட் டம் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு வலய முகாமைத்துவ மண்ட பத்தில் நடைபெறவுள் ளதாக தீவக வலயக் கல் விப் பணிப்பாளர் ஜீ.வி. இராதா கிருஷ்ணன் அறி வித்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் ஈ.எஸ்.எவ்.பி.நிதி விவரங் களை தனியாகவும், தேவைகள் விவரங்க ளையும் கொண்டுவரு மாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித் துள்ளார். (201)

## துயர் பகிர்கின்றோம்

பாரதி பதிப்பக உரிமையாளர் சங்கர் ஐயா
அவர்களின் அன்பு மனைவி
**திருமதி பூரணபாக்கியம் சங்கர்**
அவர்களின் மறைவையிட்டு அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**இ.சற்குணராசா குடும்பத்தினர்**
*(பாரதி பதிப்பக முன்னாள் ஊழியர்).*
அராலி. (88408)

## முக்கிய அறிவித்தல்

யா/திருக்குடும்ப கன்னியர்மடம் இன்று (01.09.2009) செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவசர கலந்துரையாடலொன்றை மேற்கொள்ள வேண்டியிருப்பதால் சகல ஆசிரியர்களையும், கல்வி சாரா ஊழியர்களையும் தவறாது பாடசாலைக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

(88415) **அதிபர்.**

## COMTEC
### கூறுவிலை கோரல்
### வாகன சுத்திகரிப்பு நிலையம்

சுழிபுரம் சந்தியில் பிரதான வீதிக்கு அருகாமையில் அமைந்துள்ள வாகனச் சுத்திரிப்பு நிலையத்தில் சேவை களை ஆரம்பிக்க விரும்புவோரிடமிருந்து கூறுவிலை கோரப்படுகின்றது. இதற்கு விண்ணப்பிக்க விரும்பு வோர் இடத்தைப் பார்வையிட்டு பொருத்தமான கூறு விலையினை 10.09.2009 ஆம் திகதிக்கு முன் அலுவல கத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின் றீர்கள்.

இது தொடர்பான மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

காளுவன் சந்தி,
சுழிபுரம். (88419) இயக்குநர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 19 ★ 12 ★ 1944



உதிர்வு 02 ★ 08 ★ 2009

### அமரர் சற்குரு சத்தியலிங்கம் (இராசு)

''எம் வாழ்விற்கு ஒளி வீசிய குலவிளக்கே!
சுடர் இன்றித் தவிக்கின்றோம் இருள் சூழ்ந்து
கண்ணீரில் மிதக்கின்றோம் அன்பு காட்ட
யார் இருந்தென்ன உங்கள் ஈடில்லா
அன்புக்கு நிகராகுமா! ஆறுதல் சொல்ல
தெய்வமே வந்தாலும் உங்கள்
அன்புச் சொல்லுக்கு ஈடாகுமா!''
நினைவில் எம்முடனும் நிஜத்தில்
இறைவனிடத்திலும் கலந்திருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடை
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

கடந்த 02.08.2009 அன்று அமரத்துவம் எய்திய எமது குடும்பத் தலைவரின் இறுதிக் கிரி யைகளில் கலந்து கொண்டு எம் துயரத்தில் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி, துண்டுப்பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும் எமக்கு சலக விதத்திலும் உதவி, ஒத்தாசைகள் புரிந்த அனைவருக்கும் எம் இதய பூர்வமான நன்றிகள். அன்னாரின் வீட்டுக் கிருத்திய நிகழ்வு இன்று (01.09.2009) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

*செல்லத்துரை வீதி,*
*உரும்பிராய் தெற்கு (021 222 2018)* **குடும்பத்தினர்.**

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி




### அமரர் சண்முகநாதன் சசிதரன்
01.09.2009

ஆண்டிரண்டானாலும் எங்கள்
விழிகளில் ஈரம் காயவில்லை
ஆண்டிரண்டென்ன நூறு ஆனாலும்
எங்கள் நெஞ்சங்களில்
உன் நினைவுகள் அகலாது.

ச.சத்தியரூபன் (சகோதரன்-பிரான்ஸ்).
சண்முகக்கல்லுடைக்கும் ஆலை, மீசாலை வடக்கு, கொடிகாமம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பானில் எதிர்க்கட்சி வெற்றி 54 வருடகால ஆளுங்கட்சி தோல்வி

## யுகியோ ஹடோயாமா அமைச்சரவை அமைப்பதில் தீவிரம்

டோக்கியோ, செப். 01

ஜப்பானில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் எதிர்க்கட்சியான ஜப்பான் ஜனநாயகக் கட்சி வெற்றி பெற்றுள்ளது. ஜப்பானில் 54 ஆண்டுகளாக ஆட்சி செய்துவந்த லிபரல் (தாராள) ஜனநாயகக் கட்சி இதில் தோல் வியுற்றது. இதேவேளை, வெற்றி பெற்ற ஜப்பானிய ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த யுகியோ ஹடோயாமா (வயது 62) பிரதமாகிறார். இவர் தமது அமைச்சரவையை அமைப்பதில் தீவிரம் காட்டத் தொடங்கி விட்டார்.

இதேவேளை, கடுமையான தோல்விக்குத்தாம் பொறுப்பேற்கிறார் என பிரதமர் டாரோ அலோ தெரிவித்துள்ளார். அத்துடன் தாராள ஜனநாயகக் கட்சித் தலைவர் பதவியிலிருந்தும் தாம் விலகுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமாராகும் ஜப்பான் ஜனநாயகக் கட்சித் தலைவர் யுகியோ ஹடோயாமா, ''ஜப்பான் மிக மோசமான பொருளாதார வீழ்ச்சியை சந்தித்த நேரத்தில் ஆட்சி செய்த அரசியல் தலைவர்கள் மீது மக்களுக்கு தணியாத கோபமேற்பட்டுள்ளது. இதுவே எனது வெற்றிக்கான காரணம்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சியின் வெற்றியை அடுத்து, ஜப்பானில் கடந்த அரை நூற்றாண்டுகளில் கிட்டத்தட்ட இடைவெளியின்றித் தொடர்ந்து ஆட்சியிலிருந்து வந்த லிபரல் (தாராள) ஜனநாயகக் கட்சி பதவி விலகுகின்றது.

ஜப்பானில் 54 ஆண்டுகளாக ஆட்சி செய்துவரும் லிபரல் ஜனநாயகக் கட்சியின் ஆட்சி முடிவுக்கு வரும் என ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தேர்தலுக்குப் பின்னர் எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்பீடும் தெரிவித்திருந்தது.

ஜப்பானில் நாடாளுமன்ற கீழ் அவைக்கான தேர்தல் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இத்தேர்தலில், ஜனநாய கக் கட்சிக்கு 300 இற்கும் அதிகமான இடங்கள் கிடைக்கும் என என்.எச்.கே. ரீ.வி வாக்குப் பதிவுக்குப் பின் எடுத்த கருத்துக் கணிப்பீட்டில் தெரியவந்திருந்தது.

வாக்குப் பதிவு நிறைவடைய 2 மணி நேரத்துக்கு முன்னர் வரை, 48.4 சதவீதம் வாக்குகள் பதிவாகின. நடப்பு நாடாளுமன்றத்தில் லிபரல் ஜனநாயகக் கட்சிக்கு 303 உறுப்பினர்களும், எதிர்க்கட்சியான ஜப்பானிய ஜனநாயகக் கட்சிக்கு 112 உறுப்பினர்களும் இருந்தனர்.

1955 இல் கட்சி தொடங்கப்பட்டதிலிருந்து 10 மாதங்கள் நீங்கலாக ஆட்சியில் இருந்துவரும் லிபரல் ஜனநாயகக் கட்சி முதல் முறையாக கடும் பின்னடைவை இத் தேர்தலில் சந்தித்துள்ளது.

இதையடுத்து, ஜப்பானிய ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த யுகியோ ஹடோயாமா (வயது 62) பிரதமராகிறார். ஜப்பானில் தற்போது நிலவிவரும் வேலையில்லாத் திண்டாட்டம், பொருளாதார மந்த நிலை ஆகியவை காரணமாக ஆளும் கட்சிக்குப் பின்னடைவு ஏற்பட்டுள்ளது என அரசியல் அவதானிகள் தெரிவிக்கிறார்கள்.

# பன்றிக் காய்ச்சல் மாத்திரைகளை முறையின்றி பயன்படுத்தினால் ஆபத்து

## உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை

நியூயோர்க், செப். 01

பன்றிக்காய்ச்சலுக்குப் பயன்படுத்தப்படும் டாமிபுளு மாத்திரைகளை முறையின்றி உட்கொண்டால் மோசமான விளைவுகளை ஏற்படுத்திவிடும் என உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது.

பன்றிக்காய்ச்சல் பரவிவரும் நாடுகளில் பன்றிக்காய்ச்சலுக்கான டாமிபுளு மாத்திரைகளை டாக்டர்கள் ஆலோசனையின்றி பயன்படுத்துகிறார்கள். அத்துடன், முறைப்படி ஐந்து நாள்கள் உட்கொள்ளாமல் இடையில் நிறுத்தியும் விடுகிறார்கள்'' என்றும் உலக சுகாதார அமைப்புக்கு (டபிள்யூ.எச்.ஓ.) முறைப்பாடுகள்வந்துள்ளன.

இது குறித்து உலக சுகாதார அமைப்பின் தொற்றுநோய் கட்டுப்பாட்டு மையத்தின் நிபுணர்கள் குறிப்பிடுகை யில், ''டாமிபுளு மருந்துகளை முறையின்றி பயன்படுத்தினால் மருந்தின் சக்தியை எச் 1 என் 1 வைரஸ் தடுத்து நிறுத்தி மோசமான விளைவுகளை ஏற்படுத்திவிடும்'' எனத் தெரிவித்துள்ளார்கள்.

''டாமிபுளு தனது சக்தியை இழக்க நேரிடும். எனவே, டாக்டர்கள் பரிந்துரைப்படியே மருந்துகளை உட்கொள்ளவேண்டும்'' என்றும் இந்நிபுணர்கள் கூறியுள்ளார்கள்.

டில்லியிலுள்ள எய்ம்ஸ் வைத்திய சாலையில் மருந்தியல் துறைத் தலைவர் டாக்டர் வை.கே.குப்தா கூறுகையில், ''தொற்றுநோய்க் கிருமி (வைரஸ்) மருந்தை அழிக்கும்போது அதனுடன் சேர்ந்து உயிரோட்டமாக இருக்கப் பழகிக் கொள் கிறது. இதன் காரணமாக மருந்து வேலை செய்யாமல் போய்விடலாம்'' எனக் கூறியுள்ளார்.

# தற்கொலை பயிற்சி முகாம்கள் பாகிஸ்தானில் தாக்கி அழிப்பு

இஸ்லாமாபாத், செப். 01

வடமேற்கு பாகிஸ்தானிலுள்ள ஸ்வாட் பள்ளத்தாக்கில் செயற்பட்டு வந்த தலிபான் தீவிர வாதிகளின் தற்கொலை பயிற்சி முகாம்களை பாகிஸ்தான் படை அழித்தது.

ஸ்வாட் நதியின் சிறிய பகுதியில் இயங்கி வந்த அந்த பயிற்சி முகாம்கள் மீது பாகிஸ்தான் இராணுவம் ஹெலிகொப்டரிலிருந்து குண்டுகளை வீசி தாக்கி அழித்தது. அங்கிருந்த தீவிரவாதிகளில் பலர் இந்தத் தாக்குதலில் காயமடைந்துள்ளனர் என இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அப்பகுதியைச் சேர்ந்த உள்ளூர் மக்களிடமிருந்து கிடைத்த புலனாய்வு தகவலின் அடிப்படையிலேயே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்றும் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# கொலம்பிய ஜனாதிபதியும் பன்றிக்காய்ச்சல் தாக்கத்துக்கு

கொலம்பியா, செப். 01

கொலம்பிய ஜனாதிபதி அல்வரோயுரிபி பன்றிக்காய்ச்சல் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறார்.

பன்றிக்காய்ச்சல் நோய் கொலம்பியாவிலும் வேகமாகப் பரவி வருகிறது. இதுவரை 621 பேர் பன்றிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர். 26 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், கொலம்பிய ஜனாதிபதி அல்வரோயுரிபி பன்றிக்காய்ச்சல் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை அவருக்கு காய்ச்சல், ஜலதோஷம், தலைவலி என்பன ஏற்பட்டன.

ஜனாதிபதி மாளிகையில் தங்கி ஓய்வு எடுத்த அவரிடம் வெள்ளிக்கிழமை இரவு இரத்த மாதிரி எடுத்து ஆய்வு செய்யப்பட்டது. அப்போது ஜனாதிபதி அல்வரோக்கு பன்றிக்காய்ச்சல் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது.

ஆர்ஜென்ரீனாவில் சமீபத்தில் தென்னமெரிக்க நாடுகளின் தலைவர்களின் கூட்டம் நடைபெற்றது. இதில் ஜனாதிபதி அல்வரோ கலந்துகொண்டார். அப்போது யார் மூலமோ அவருக்கு பன்றிக்காய்ச்சல் பரவி உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதையடுத்து, ஜனாதிபதி மாளிகையில் அவர் தனிமையில் சிகிச்சை பெற்று வருகிறார். அவர் உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என கொலம்பிய அமைச்சர் டிகோ பலசியோ கூறியுள்ளார்.

ஆர்ஜென்ரீனாவில் நடைபெற்ற மாநாட்டில் ஜனாதிபதி அல்வரோ எந்தெந்த நாட்டுத் தலைவர்களைச் சந்தித்துப் பேசினாரோ, அவர்கள் அனைவரையும் உஷாராக இருக்கும்படி கொலம்பிய அதிகாரிகள் முன்னெச்சரிக்கை தகவல்களை அனுப்பியுள்ளனர்.

# பன்றிக்காய்ச்சலுக்கு இதுவரை சர்வதேச ரீதியில் 2,110 பேர் பலி!

நியூயோர்க், செப். 01

சர்வதேச ரீதியில் பன்றிக்காய்ச்ல் வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழ்ந்தவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 110 ஆக உயர்வடைந்துள்ளது என உலக சுகாதார நிறுவனம் அதன் அறிக்கையில் குறிப்பிட் டுள்ளது.

வட, தென் அமெரிக்க கண்டங்களில் மாத்திரம் இந்த வைரஸ் தொற்றுக்குள்ளாகி ஆயிரத்து 876 பேர் உயிரிழந்துள்ளனர் என இந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் 139 பேர் இந்த வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளனர். அத்துடன், உலகில் சுமார் 2 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் பன்றிக்காய்ச்சல் வைரஸ் தொற்றுக்குள்ளாகி பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் மேலும் உலக சுகாதார நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

# ஆப்கானிஸ்தான் ஜனாதிபதித் தேர்தலில் ஹமீத் கர்சாய் தொடர்ந்தும் முன்னேற்றம்

காபூல், செப். 01

ஆப்கானிஸ்தான் ஜனாதிபதித் தேர்தலில் ஹமீத் கர்சாய் வெற்றியை நோக்கி முன்னேறி வருகிறார். மூன்றாவது தவணையாக சனிக்கிழமை வெளியிடப்பட்ட முடிவுகளின்படி கர்சாய் 46.3 சதவீத வாக்கு களும், அவரது முக்கிய எதிரியான அப்துல்லா அப்துல்லா 31.4 சதவீத வாக்குகளும் பெற்றுள்ளனர்.

இதற்கு முன்னர் முடிவுகள் அறிவிக்கப்பட்டபோது, இருவருக்கும் இடையே 9 சதவீத வாக்கு வித்தியாசம் இருந்தது. தற்போது அது சுமார் 15 சதவீதமாக அதிகரித்துள்ளது.

பதிவான வாக்குகளில் குறைந்தபட்சம் 50 சதவீத வாக்குகளைப் பெறுபவர்களே ஜனாதிபதியாக முடியும். இல்லையெனில், முதல் இரண்டு இடங்களைப் பிடிப்பவர்கள் போட்டியிட மீண்டும் தேர்தல் நடத்தப்படும்.

தற்போதுள்ள முடிவுகளின்படி கர்சாய் 50 சதவீத வாக்குகளைப் பெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. வாக்கு எண்ணிக்கை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. முதல் கட்ட முடிவுகள் நாளை மறுதினமும், இறுதி முடிவு செப்ரெம்பர் 17 ஆம் திகதியும் அறிவிக்கப்படும்.

ஆப்கானிஸ்தானில் 2 ஆவது முறையாக ஜனாதிபதித் தேர்தல் ஓகஸ்ட் 20 இல் நடைபெற்றது. தலிபான்களின் தாக்குதல் காரணமாக எதிர்பார்த்த அளவு வாக்குகள் பதிவாகவில்லை. மொத்தம் 35 சதவீத வாக்குகள் மட்டுமே பதிவாகின.

வாக்கு எண்ணிக்கை மிக மந்தமாக நடைபெற்றுவரும் நிலையில், தேர்தல் முறைகேடுகள் குறித்து தேர்தல் முறைப்பாடு அமைப்புக்கு 2 ஆயிரத்துக்கும் அதிகமான முறைப்பாடுகள் வந்துள்ளன. அவற்றில் 567 [illegible] கடுமை யான [illegible] களையே மாற்றக்கூடும் எனக் கூறப்படுகிறது.

# இந்தியா மீது பாக். குற்றச்சாட்டு

இஸ்லாமாபாத், செப். 01

இந்தியா அமைதிப் பேச்சுகளுக்கு முன்வராமல் நழுவுகிறது என பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் முஹமது குரேஷி குற்றஞ்சாட்டியுள்ளார்.

இஸ்லாமாபாத்தில் சனிக்கிழமை நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடொன்றில் அவர் பேசுகையில் இவ்வாறு குற்றஞ் சாட்டியுள்ளார்.

பேச்சுகள் மூலம்தான் இரு நாடுகளுக்குமிடையிலான பிரச்சினையைத் தீர்க்க முடியும் என இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் ஒப்புக் கொண்டுள்ளார். ஆனால், பேச்சுகளுக்கு முன்வராமல் இந்தியா நழுவுகிறது. பாகிஸ்தானுடன் பேச இந்தியா முன்வர வேண்டும்'' என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# ஆக்கிரமிக்கப்பட்ட காஷ்மீர் பாகிஸ்தானின் 5 ஆவது மாநிலம்

## பிரதமர் ரசா கிலானி தெரிவிப்பு

இஸ்லாமாபாத், செப். 01

இந்தியாவின் எல்லைப் பகுதியில் பாகிஸ்தானால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காஷ்மீர் பகுதியை பாகிஸ்தான் தனது 5 ஆவது மாநிலமாக அறிவித்துள்ளது.

அதற்கு கில்ஜித் பல்கிஸ்தான் எனவும் பெயரிடப்பட்டுள்ளது. இதுபற்றி பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானி குறிப்பிடுகையில், அமைச்சரவையின் ஒப்புதல் பெற்ற பின்னரே இது அமுல்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

அம்மாநிலத்திற்கென பொதுத்துறை, சட்டத்துறை, சுகாதாரத்துறை ஆகியவை உட்பட தனித்துறைகளும் ஏற்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# நான் மீண்டும் கிரிக்கெட் விளையாடுவது சந்தேகம்

## பிளின்ரொப் கவலை

''நான் மீண்டும் கிரிக்கெட் விளையாடுவது சந்தேகமாகவே உள்ளது''-என்று இங்கிலாந்து அணியின் சகலதுறை வீரர் அன்ட்ரூ பிளின்ரொப் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எனக்கு முழங்கையில் ஏற்பட்ட காயத்திற்கு சத்திரசிகிச்சை செய்யப்பட்டது. இதன் பின்னர் நான் மீண்டும் கிரிக்கெட் விளையாடுவேனா என்ற சந்தேகம் வந்துவிட்டது. எதிர்பார்த்த அளவுக்கு நான் குணமாகவில்லை என்றே நினைக்கின்றேன்.

நான் மீண்டும் கிரிக்கெட் விளையாடாமல் போவதற்கு நிறையச் சாத்தியங்கள் உண்டு.

என்னுடைய கிரிக்கெட் வாழ்வு இந்த நிலையில் முடிவதை நான் விரும்பவில்லை. டெஸ்ட் கிரிக்கெட்டில் ஓய்வுபெற்றாலும் ஒருநாள் மற்றும் 'ருவென்ரி-20' போட்டிகளில் தொடர்ந்தும் நான் விளையாடவே விரும்புகிறேன்'' - என்றார்.

# இந்திய அணியின் பயிற்சியாளர் கிரிஸ்டனின் ஒப்பந்தம் நீடிப்பு

இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக தென்னாபிரிக்காவைச் சேர்ந்த கேரி கிரிஸ்டன் உள்ளார். 2 ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்ட அவரது பயிற்சிக் காலம் அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துடன் முடிவடைகிறது.

இந்த நிலையில் அவரது செயற்பாடு திருப்தி அளிக்கும் வகையில் உள்ளமையாலும் எனவும், இவரது பயிற்சியில் இந்திய அணி பல சிறப்பு மிக்க வெற்றிகளைப் பெற்றுள்ளமையாலும் அவருடனான ஒப்பந்தத்தை 2011ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் நடக்கவுள்ள உலகக் கிண்ணப் போட்டிவரை நீடிக்க இந்திய கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் 24ஆம் திகதி மும்பையில் நடைபெறவுள்ள இந்திய கிரிக்கெட் சபையின் இந்த ஆண்டுக்கான பொதுக்குழுக் கூட்டத்தில் இதுபற்றிய முடிவு எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பா.ஜ.க. தலைமைப் பதவியில் மாற்றமில்லை; எதிர்க்கட்சித் தலைவராக அத்வானி நீடிப்பார்

## வெங்கையா நாயுடு தெரிவிப்பு



டில்லி, செப். 01

பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவராக எல்.கே.அத்வானி தொடர்ந்து நீடிப்பார். உள்கட்சித் தேர்தல் விரைவில் நடைபெறவுள்ளது. தற்போது எந்தப் பதவியும் வெற்றிடமாக இல்லை - என்று அக் கட்சியின் மூத்த தலைவர் வெங்கைய நாயுடு தெரிவித்தார்.

இதுதொடர்பாக ஹைதராபாத்தில் செய்தியாளர்களிடம் வெங்கைய நாயுடு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கூறியவை வருமாறு -

அத்வானிதான் எங்கள் தலைவர். அத்வானி ஓரங்கட்டப்படுகிறார் என செய்திகள் வருகின்றன. அவரை ஓரங்கட்டும் தகுதி யாருக்கு உள்ளது? தலைமை மாற்றம், புதுத் தலைவர் நியமனம், ஆர்.எஸ்.எஸ். கட்டளை போன்ற செய்திகள் வியப்பாக உள்ளன. அவற்றுக்கு எந்த ஆதாரமும் இல்லை.

உள்கட்சித் தேர்தல் விரைவில் நடைபெறவுள்ளது. தற்போது எந்தப் பதவியும் வெற்றிடமாக இல்லை. கட்சியின் நலனுக்கு என்ன செய்ய வேண்டுமோ, அது காலப் போக்கில் நடைபெறும்.

கட்சியின் தினசரி நடவடிக்கைகளில் ஆர்.எஸ்.எஸ். தலையிடுவதில்லை. மக்களவையில் வாக்களிக்க பணம் கொடுத்த விவகாரம் தொடர்பாக நீதி விசாரணைக்கு உத்தரவிட்டால் உண்மை வெளிவரும்.

விலைவாசி உயர்வு, வேலைவாய்ப்பின்மை, தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக விவாதிப்பதை விட்டுவிட்டு, தற்போது பொருத்தமில்லாத கந்தஹார் விமானக் கடத்தல் சம்பவம் குறித்து காங்கிரஸும், எதிர்க்கட்சிகளும் பேசி வருகின்றன - என்றார்.

இதனிடையே, எல்.கே.அத்வானியை அவரது இல்லத்தில் ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பாகவத் ஞாயிற்றுக்கிழமை காலை மீண்டும் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பு குறித்து மோகன் பாகவத்துடன் அத்வானியை சந்திக்கச் சென்ற ஆர்.எஸ்.எஸ். மூத்த தலைவர் மதன்தாஸ் கூறியவை வருமாறு -

கட்சித் தலைவர்கள் ஒருங்கிணைந்து தற்போதைய சூழ்நிலையை எதிர்கொள்வதுடன் பிரச்சினைகளில் இருந்து விடுபட்டு மீண்டும் வலுப்பெறுவோம் என பா.ஜ.க. தலைவர்கள் உறுதி அளித்துள்ளனர்.

அவ்வாறு செயற்படுவார்கள் என நம்புகிறோம். பா.ஜ.க. என்பது நிறைய தொண்டர்களைக் கொண்ட பெரிய கட்சி. எனவே, பிரச்சினைகள் வரத்தான் செய்யும். அந்தப் பிரச்சினைகளைத் தலைவர்கள் தீர்ப்பார்கள் என்ற நம்பிக்கை உள்ளது - என்றார்.

இதேவேளை, பாரதிய ஜனதாக் கட்சியின் தற்போதைய தலைவர் ராஜ்நாத் சிங் மீண்டும் தலைவராக முடியாது என அக் கட்சியின் செய்தித் தொடர்பாளர் பிரகாஷ் ஜவடேகர் செய்தியாளர்களிடம் ஞாயிற்றுக்கிழமை கூறினார்.

அருண் ஜெட்லி, வெங்கைய நாயுடு, சுஷ்மா ஸ்வராஜ், அனந்த குமார் போன்றவர்கள் அடுத்த தலைவராவதில் மோகன் பாகவத்துக்கு விருப்பம் இல்லை என்று கூறப்படுகிறது.

இந்நிலையில், பா.ஜ.கவின் உள்கட்சி விவகாரங்கள் பற்றி கவலைப்படுவதை விட்டுவிட்டு, விலைவாசி உயர்வு, நாட்டில் நிலவும் வரட்சி நிலை குறித்து கவலைப்படுமாறு பிரதமர் மன்மோகன் சிங்குக்கு பா.ஜ.க. தலைவர் ராஜ்நாத் சிங் கடிதம் எழுதியுள்ளார்.

# தூத்துக்குடிக் கடற்பகுதியில் 12 இலங்கை மீனவர் கைது!

சென்னை, செப். 01

இந்தியக் கடற்பகுதிக்குள் நுழைந்த 12 இலங்கை மீனவர்களை இந்தியக் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

தூத்துக்குடி அருகே இந்தியக் கடற்பகுதியில் அத்துமீறி நுழைந்த இலங்கை மீனவர்களின் இரண்டு படகுகளை இந்தியக் கடலோர காவல் படையினர் தடுத்து நிறுத்தினர்.

அதிலிருந்த 12 இலங்கைச் சிங்கள மீனவர்களைக் கைதுசெய்து தூத்துக்குடிக்கு கொண்டு சென்றிருக்கிறார்கள்

அந்த மீனவர்களிடம் விசாரித்ததில் அவர்களது படகுகள் பழுது காரணமாக கட்டுப்பாட்டை இழந்து கடல் நீரோட்டத்தால் அங்கு இழுத்து வரப்பட்டது எனத் தெரிவித்திருக்கிறார்கள். எனினும் அவர்களிடம் தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

# இந்தியாவை நோக்கி 165 ஏவுகணைகள்; தாக்குதல் நடத்த பாக். அதிரடித் திட்டம்!

## 'நியூயோர்க் ரைம்ஸ்' தெரிவிப்பு

டில்லி, செப். 01

அமெரிக்காவிடம் இருந்து வாங்கிய 165 ஏவுகணைகளில் ஒப்பந்த விதிகளை மீறி பாகிஸ்தான் மாற்றங்களை செய்துள்ளது. இந்தியாவை குறிவைத்து இவை அமைக்கப்பட்டுள்ளன. பாகிஸ்தானின் இந்தச் செயலுக்கு அமெரிக்க அரசு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்தச் செய்தியை அமெரிக்காவில் வெளியாகும் 'நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகை முதல் பக்கச் செய்தியாக வெளியிட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தவை வருமாறு -

பாகிஸ்தான் கடற்படைக்கு 1985 மற்றும் 1988 ஆம் ஆண்டுகளில் அமெரிக்கா 165 ஹார்பூன் ஏவுகணைகளை விற்பனை செய்தது. ஒப்பந்தப்படி கப்பல்களுக்கு எதிரான தாக்குதல் நடத்தத்தான் இவற்றைப் பயன்படுத்த வேண்டும். ஆனால் இந்த ஏவுகணைகளை இந்தியாவைக் குறிவைத்து தரைவழியாக தாக்குதல் நடத்தும் வகையில் பாகிஸ்தான் மாற்றியமைத்துள்ளது. இந்த ஏவுகணைகள் இந்தியாவைக் குறிவைத்து நிறுவப்பட்டுள்ளன. இது போல் அமெரிக்க தயாரிப்பான பி-3 சி போர் விமானங்களிலும் மாற்றம் செய்யப்பட்டு இருக்கிறது. பாகிஸ்தானின் இந்தச் செயலுக்கு அமெரிக்க அரசு கடும் எதிர்ப்பும் கண்டனமும் தெரிவித்துள்ளது - என்றுள்ளது.

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா வழங்கும் நிதி, இந்தியாவுக்கு எதிராக போர் ஆயுதங்கள் வாங்க பயன்படுத்தப்படுகிறது என வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா ஏற்கனவே குற்றஞ்சாட்டி இருந்தார்.

பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அதிகாரி ஒருவர் இஸ்லாமாபாத்தில் நேற்றுமுன்தினம் கூறுகையில், அமெரிக்காவிடம் இருந்து வாங்கப்பட்ட ஏவுகணைகளில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை - என்றார்.

ஆனால் நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில், ஏவுகணைகளை நவீனப்படுத்தி வடகொரியா பாணியில் மாற்றி அமைத்து இருக்கிறோம் என்று பாகிஸ்தானின் மூத்த அதிகாரி ஒருவர் கூறியிருக்கிறார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் இந்தச் செயலுக்கு அந்நாட்டு பிரதமர் கிலானியிடம் ஜூலை மாதமே அமெரிக்க அரசு எதிர்ப்பையும் கண்டனத்தையும் தெரிவித்து விட்டது என அந்தப் பத்திரிகை மேலும் கூறுகிறது.

# ஈழப்பிரச்சினைக்காக விஜய், விஜயகாந்த் ஏதாவது போராட்டம் நடத்தியதுண்டா..?

## பா.ம.க. கேள்வி

சென்னை, செப். 01

விஜய், விஜயகாந்த் போன்ற நடிகர்கள், ஈழப் பிரச்சினைக்காக ஏதாவது போராட்டம் நடத்தியதுண்டா - என்று பா.ம.க. எம்எல்ஏ வேல்முருகன் கேள்வி எழுப்பியுள்ளார்.

கடலூரில் நடந்த அக்கட்சிக் கூட்டத்தில் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

தகுதியும் திறமையும் இல்லாத நடிகர்கள் இன்று அரசியல் பிரவேசம் செய்து வருகின்றனர். இவர்களில் எத்தனை பேர் சமூக முன்னேற்றத்திற்காக போராட்டம் செய்து சிறை சென்றனர் எனக் கூற முடியுமா?

ஒரு சம்மன் அனுப்பியதற்கே கூச்சலிடும் விஜயகாந்த் போன்றவர்களால் நாட்டை எப்படி காப்பாற்ற முடியும் என்பதை இளைஞர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

விஜய், விஜயகாந்த் போன்ற நடிகர்கள், ஈழப் பிரச்சினைக்காக ஏதாவது போராட்டம் நடத்தியதுண்டா? தகுதி, திறமை, சமூக அக்கறை இல்லாத நடிகர்களின் அரசியல் பிரவேசத்தால், கலாசாரச் சீரழிவு ஏற்பட்டுள்ளது. இன்றைய அரசு ஈழத் தமிழர்களுக்கு துரோகம் இழைத்து வருகிறது - என்றார்.

# தமிழ் ஈழம் மலர்வதை யாராலும் தடுக்கமுடியாது என்கிறார் வைகோ



சென்னை, செப். 01

இலங்கையில் தமிழர்கள் படும் துயரத்தை மத்திய மாநில அரசுகள் வேடிக்கை பார்க்கின்றன. தமிழ் ஈழம் மலர்வதை யாராலும் தடுக்க முடியாது - என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

மன்னன் பூலித்தேவனின் 294 ஆவது பிறந்த நாள் பொதுக்கூட்டம் சென்னையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. (பூலித்தேவன் புலித்தோல் மற்றும் புலிநகங்களை அணிவதில் விருப்பமுடையவனாக காணப்பட்டதால் புலித்தேவன் எனவும் அழைக்கப்படுவது உண்டு என்று கலைக் களஞ்சியத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது) அதில் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

நம் இளைஞர்களுக்கு நம் முன்னோர்களின் தியாகம்மிக்க வீர வரலாறு குறித்த செய்திகள் தெரியவில்லை. எனவே அந்த வரலாற்றை நினைவு கூர்வது நமது கடமை.

1750 களில் தென் தமிழகத்தில் ஆங்கிலேயரை எதிர்த்து பல வீரம் மிகுந்த போராட்டங்களை நடத்தியவன் பூலித்தேவன். அதாவது இந்தியாவிலேயே ஆங்கிலேயரை எதிர்த்து முதலில் போராடியவன்.

தான் மட்டுமின்றி தென் தமிழகத்திலிருந்த பாளையக்காரர்கள் அனைவரையும் ஆங்கிலேயருக்கு எதிராக ஓரணியில் திரட்டியவன் பூலித்தேவன். ஆங்கிலேயருக்கு மிகப்பெரும் சவாலாக அவன் திகழ்ந்தான். இலங்கையில் தமிழர்கள் படும் துயரங்கள் இன்னும் தொடருகின்றன. மத்திய மாநில அரசுகள் அங்கு நடப்பதை வேடிக்கைதான் பார்க்கின்றன. இலங்கையில் தமிழீழம் மலர்வதை யாராலும் தடுக்க முடியாது - என்றார்.

# ராஜீவ் கொலையில் இந்தியருக்குத் தொடர்பா? கே.பியிடம் விசாரிப்பதற்கு இந்தியா முடிவு!

டில்லி, செப். 01

ராஜீவ்காந்தி கொலைச் சதியில், இந்தியர்களுக்கும் தொடர்பு இருக்கிறதா என்பது பற்றி பத்மநாதனிடம் (கே.பி.) விசாரணை நடத்த இந்தியா தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

சமீபத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவரான கே.பத்மநாதன், தென் கிழக்கு ஆசிய நாட்டில் பிடிபட்டார்.

இப்போது அவர் இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் கொழும்பில் இருக்கிறார். அவரை சிறையில் கைதியாக அடைத்து வைத்து இலங்கை அதிகாரிகள் விசாரித்து வருகிறார்கள்.

இந்த நிலையில் கே.பத்மநாதனிடம் இருந்து கூடுதல் தகவல்களைப் பெற இந்தியாவின் கண்காணிப்பு முகவர் அமைப்பு விரும்புகிறது. இதன்படி, இதில் இடம் பெற்றுள்ள அதிகாரிகள், ஏராளமான கேள்விகளை கொண்ட பட்டியலை தயாரித்து வருகிறார்கள். ராஜீவ்காந்தி கொலைச் சதியில் இந்தியர்கள் யாருக்கும் தொடர்பு இருக்கிறதா என்ற கேள்வி உட்பட பல்வேறு முக்கிய கேள்விகள் கொண்ட இந்த பட்டியல், இலங்கை அரசுக்கு அனுப்பப்படவிருக்கிறது. இந்தக் கேள்விகளுக்கு, கே.பி.யிடம் இருந்து பதில் பெற்றுத்தர இலங்கையை இந்தியா கேட்டுக்கொள்ள இருக்கிறது.

இலங்கை சென்று நேரடியாக பத்மநாதனிடம் விசாரிக்கவும், இலங்கை அரசிடம் அனுமதி கோரப்பட்டு உள்ளது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தாம் செய்த முட்டாள்தனம் திருமணம் என்கிறார் கமல்!



டில்லி, செப். 01

திருமணங்கள் தோல்வியில் முடிகின்றன. எனவே, திருமணம் தேவையில்லை - என்று தமிழ்த் திரையுலக நடிகர் கமலஹாசன் கூறினார்.

டில்லியிலிருந்து ஒளிபரப்பாகும் தனியார் தொலைக்காட்சிக்கு நேற்றுமுன்தினம் பேட்டியளித்தபோதே இதனைக் கூறினார். அப்போது அவர் மேலும் கூறியவை வருமாறு -

திருமணங்கள் தோல்வியில் முடிகின்றன. எனவே திருமணங்கள் தேவையில்லை. குடும்பம் மிகவும் சக்தி வாய்ந்தது. பலமானது.வாணி கணபதி, சரிகா ஆகியோரை நான் திருமணம் செய்து கொண்டேன்.

எனக்குப் பிடித்தவர்களின் ஆசையை நிறைவேற்ற நான் செய்த முட்டாள்தனமான செயல்தான் திருமணம். நான் செய்து கொண்ட ஒரு சமரசம் அது. நான் விரும்பிய பெண்ணுடன் இருக்க நான் கொடுத்த விலைதான் திருமணம்.

இவ்வாறு கமலஹாசன் சொன்னதும், நிருபர் குறுக்கிட்டு, அப்படியானால் 2 குழந்தைகள் பெற்ற பின் சரிகாவை ஏன் திருமணம் செய்து கொண்டீர்கள் என்று கேட்டார்.

அதற்கு கமலஹாசன் -

ஹோட்டல்களில் அறை எடுத்து தங்குவதில் சங்கடங்கள் ஏற்பட்டன. இந்தக் குழந்தைகளின் தாயார் இவர் என்று சொன்னால் அதுமட்டும் போதாது. எனது மனைவி யார் என்றும் கேட்டனர். எனவேதான் சரிகாவை துணைவியாராக ஆக்கிக் கொண்டேன். என் குழந்தைகளுடன் இப்போது சரிகா எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்ளவில்லை.

அவர்களும் அப்படித்தான். குழந்தைகள், சரிகாவுடன் இருக்க விரும்பவில்லை.

அவர்கள் வயது வந்தவர்கள்.வாக்களிக்கவும் சுயமாக முடிவு எடுக்கவும் அவர்களால் முடியும். எனவே அந்தப் பிரச்சினையில் நான் தலையிடுவதில்லை.

நான் அரசியலில் ஈடுபடுவேனா? என்று கேட்கிறார்கள். நான் அரசியலுக்கு வருவதை மக்கள் விரும்ப [illegible] கோபம் கொள் [illegible] பாக்கியுடன் தான் செல்ல வேண்டியிருக்கும் - என்று கூறினார்.

# சந்திராயன் - 1 செயலிழந்தமை குறித்து விசாரணை நடத்த உயர்மட்டக் குழு!

## 'இஸ்ரோ' தலைவர் மாதவன் நாயர் பேட்டி



பானாஜி, செப். 01

சந்திரயான் - 1 விண்கலம் செயலிழந்தமை பற்றி விசாரணை நடத்த உயர்மட்டக் குழு அமைக்கப்படும் என்று, இந்திய விண்வெளி ஆராய்ச்சி மைய (இஸ்ரோ) தலைவர் மாதவன் நாயர் அறிவித்தார்.

நிலவு பற்றிய ஆராய்ச்சிக்காக, 'இஸ்ரோ' சார்பில் கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 22 ஆம் திகதி சந்திரயான்-1 விண்கலம் விண்ணில் செலுத்தப்பட்டது. இந்த விண்கலம் 2 ஆண்டுகள் நிலவைச் சுற்றிவரத் திட்டமிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில், கடந்த சனியன்று அதிகாலை திடீரென்று அந்த விண்கலத்திடம் இருந்து தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டது.

இதையடுத்து சந்திரயான்-1 செயற்பாடு முடிவுக்கு வந்ததாக 'இஸ்ரோ' தலைவர் ஜி.மாதவன் நாயர் அறிவித்தார். கோவா மாநிலம் பனாஜியில் நடைபெற்ற கருத்தரங்கில் பங்கேற்கவந்திருந்த அவர் அளித்த பேட்டியின்போது இந்தத் தகவலை தெரிவித்தார். மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு -

சந்திரயான்-1 விண்கலம் செயலிழந்தது பற்றி விசாரணை நடத்துவதற்காக உயர்மட்ட குழு ஒன்று அமைக்கப்படும்.

சந்திரயான்-1 திடீரென்று செயல் இழந்தாலும், இந்தத் திட்டம் மகத்தான வெற்றியாகும். அதன் பணிகளில் 95 சதவீதம் நிறைவேறிவிட்டது. 70 ஆயிரம் படங்கள் உள்ளிட்ட ஏராளமான விவரங்களை அது அனுப்பி உள்ளது. 351 நாள்கள் அது நிலவைச் சுற்றி வந்தது மிகப்பெரிய சாதனை.

இந்தத் திட்டப்பணியில் ஏற்பட்ட தடங்கல் காரணமாக, சந்திரயான்-2 விண்கலம் ஏவப்படுவதில் எந்தத் தாமதமும் இருக்காது. அமெரிக்க மற்றும் ரஷிய ராடர்களின் உதவியுடன் நிலவில் இருந்து 200 கிலோமீற்றர் தொலைவில் சுற்றிக் கொண்டிருக்கும் சந்திரயான்-1 விண்கலத்தைத் தேடுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது - என்றார்.

சந்திரயான்-1 விண்கலத்தின் செயற்பாடு திடீரென்று முடிவுக்கு வந்ததற்கு யார் பொறுப்பு? என்று கேட்டதற்கு, நான் மட்டுமே பொறுப்பு - என்று அவர் பதிலளித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














உலக வங்கியின் ஏற்பாட்டில் 'கற்றலின் கோபுரங்கள்' நூல் அறிமுக விழா யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்றது.

நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்களையும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்கா, உயல்கல்வி அமைச்சின் செயலாளர் மாலினி பீரிஸ் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட பிரமுகர்களையும் மேல் வரிசையிலும் -

பேராசிரியர் காமினி சமரநாயக்கா, உலக வங்கியின் இலங்கைப்பணிப்பாளர் நயாக்கோ இஷி, யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் ஆகியோர் உரையாற்றுவதை கீழ் வரிசைப்படங்களிலும் காணலாம். (படங்கள் :- லக்ஷ்மன்)

# நாட்டின் உயர்கல்வியை மேலும் கட்டியெழுப்பும் புதிய செயல் திட்டங்களை நாம் அனைவரும் இணைந்து ஒரு குழுவாக செயற்பட வேண்டும்

## உலக வங்கியின் அனுசரணையில் நடைபெற்ற கருத்தரங்கில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் காமினி

யாழ்ப்பாணம், செப்.01

நாட்டின் உயர் கல்வியை மேலும் கட்டியெழுப்புவதற்கு நாம் அனைவரும் ஒரு குழுவாக இணைந்து புதிய செயற்திட்டங்களை வகுத்து செயற்பட வேண்டும். அதுவே இன்றைய பிரதான தேவை.

இவ்வாறு தெரிவித்தார் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்கா.

உலக வங்கியின் இலங்கை அலுவலகத்தின் அனுசரணையுடன் யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்ற 'கற்றலின் கோபுரங்கள்' நூலின் அறிமுக விழா தொடர்பாக நடைபெற்ற கருத்தரங்கில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பேராசிரியர் காமினி சமரநாயக்கா மேலும் தமது உரையில்-

உலகத்தில் துரிதகதியில் வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்பத்தில் எமது மாணவர்கள் பல படிகள் உயரவேண்டி உள்ளது. அதன் பொருட்டு நாம் எல்லோரும் சேர்ந்து ஒரு குழுவாக இயங்குவது மிக அவசியமாகிறது.

எங்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு தகவல் தொழில்நுட்பமே இனி அத்திவாரமாக- அடிப்படையாக அமையமுடியும்; அமைய வேண்டும் அந்த இலக்கை நோக்கி நாம் தடம்பதிக்க வேண்டும்.

நாட்டின் இந்தப் பிரதேசத்தில் காலத்துக்கேற்ற கல்வியை, புதிய பரிமாணங்களை அறிமுகம் செய்து செயற்படுத்துவதற்கு யாழ்.பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் தலைமைத்துவம் வகிக்க வேண்டும். பொதுவாக நோக்கும் இடத்தில், இந்தியாவுடன் ஒப்பிடுகையில் எமது கல்வித்தரம் உயர்ந்ததாகவே உள்ளது - என்றார்.

உலக வங்கியின் தென்னாசியப் பிரிவின் மனித வள அபிவிருத்தித் துறையின் சிரேஷ்ட பொருளியல் நிபுணர் கலாநிதி ஹர்சா அத்துருபான தமது உரையில் தெரிவித்ததாவது:

உலகப் பொருளாதாரத்தின் அபிவிருத்திக்கும் மக்கள் நலனுக்கும் உதவும் விதத்தில் உலகக் கல்வித்துறையில் மாற்றங்கள் தேவை. அது இப்போது ஏனைய நாடுகளில் ஆர்வத்துடனும் தீவிரத்துடனும் வளர்ச்சி கண்டு வருகிறது. அறிவுசார் பொருளாதார வளர்ச்சி இன்றியமையாததாகி வருகிறது. அதற்கு ஆங்கில அறிவு மிகமிக அவசியம். எங்கள் நாட்டில் தகவல் தொழில்நுட்பத்தை வளர்ப்பதில் தனியார் துறை குறிப்பிடத்தக்க பங்கினை வகிக்கலாம். அதற்கு அடிப்படையாக அவை எமது மாணவர்களின், இளைஞர்களின் ஆங்கில அறிவை மேம்படுத்த வேண்டும் இது இன்றைய முதற்தேவை- என்றார்.

சுமார் இருநூறு வருடங்களுக்கு முன்னர் இலங்கையிலேயே புலமைவாய்ந்த ஆங்கில அறிஞர்கள் யாழ்ப்பாணத்தில் தான் வாழ்ந்தார்கள். பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் மொழிபெயர்ப்பாளராக ஒரு யாழ்ப்பாணத் தமிழரே இருந்துள்ளார் என்பது பெருமைக்குரியது - என்றார்.

உலக வங்கியின் இலங்கைப் பணிப்பாளர் நயாக்கோ இஷி தமது உரையில் கூறியதாவது:

உலகப் பொருளாதார வளர்ச்சிக்கு ஈடு கொடுக்க இலங்கையும் துரித வேகத்தில் செயற்பட வேண்டும். அதற்கேற்ற வகையில் இந்த நாட்டிலும் உயர் கல்வித்துறை வளர்ச்சியடைய வேண்டும்.

இப்போது இந்த நாட்டில் போர் முடிந்துவிட்டது. கல்வியில் முன்னேற்றம் காண்பதனூடாகவே பொருளாதார மாற்றங்களுக்கு ஈடுகொடுக்க முடியும். குறிப்பாக தகவல் தொழில்நுட்பம் இந்த நாட்டின் பல படிகள் முன்னேறிப் பாயவேண்டும்.

அதற்கு உலகவங்கி எப்போதும் துணையாக இருக்கும் - என்றார்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கனின் தலைமையில் நடைபெற்ற நேற்றைய நிகழ்வில் உயர்கல்வி அமைச்சின் செயலாளர் மாலினி பீரிஸும் உரையாற்றினார்.

இந் நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக பீடாதிபதிகள் பேராசிரியர்கள், அரச அதிபர், உயர்கல்வித்துறை மற்றும் கல்வித்துறைசார் அதிகாரிகள், பல்கலைக்கழக மாணவர்கள், உயர்தரவகுப்பு மணவர்கள், தனியார் கணனிக்கல்வி நிலையங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் என்று பலரும் கலந்து கொண்டனர். (அ-120)

# வவுனியா சென்றலை வென்றது மகாஜனா

யாழ்ப்பாணம், செப். 01

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்று வரும் சுற்றுப் போட்டியில் மாவட்டங்களுக்கு இடையிலான ஆட்டம் ஒன்றில் தெல்லிப்பழை மகாஜனா வெற்றி பெற்றது.

வவுனியா மாவட்ட அணியான வவுனியா மத்திய கல்லூரிக்கும் யாழ். மாவட்ட அணியான மகாஜனக் கல்லூரிக்கும் இடையில் வவுனியாவில் இந்த ஆட்டம் நேற்று இடம் பெற்றது.

இந்த ஆட்டத்தில் மகாஜனா அணி 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

வவுனியா விவேகானந்தா ம.வி அணியுடன் மகாஜனா அணி இன்று மோதுகிறது. (1-86)

# மாவட்ட தலைவர்களுக்கான கண்காணிப்புக் குழுக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், செப். 01

நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவிருந்த சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களிற்கும், அரச சார்பற்ற நிறுவனங்களிற்குமான செப்ரெம்பர் மாதத்திற்குரிய மாதாந்த மாவட்ட கண்காணிப்புக்குழுக் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது.

எதிர்வரும் 11 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு இக் கூட்டம் நடைபெறும் என்று பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (1)

# உரும்பிராய் பற்றைப் பகுதியிலிருந்து இளம்பெண்ணின் எலும்புக்கூடு மீட்பு

## காணாமற்போன அச்செழுப் பெண்ணினுடையதா எனச் சந்தேகம்

யாழ்ப்பாணம், செப்.01

உரும்பிராய், கோப்பாய்வெளிப்பற்றைப் பகுதியில் இருந்து இளம் பெண் ஒருவரின் எலும்புக்கூடு நேற்று கோப்பாய் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

சில காலத்துக்கு முன்னர் இறந்ததாகக் கருதப்படும் இந்தப் பெண்ணின் எலும்புக் கூட்டை பொலிஸார் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைத்துள்ளனர்.

18 வயதுக்கும் 21 வயதுக்கும் இடைப்பட்டவராக இருக்கலாம் என வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

எலும்புக் கூடு மீட்கப்பட்ட இடத்துக்கு சமீபமாக கைவிடப்பட்ட நிலையில் சைக்கிள் ஒன்றும் பெண்கள் அணியும் செருப்பும் கைத்தொலைபேசியும் சில உடுப்புக்களும் காணப்பட்டதாக அந்தப் பிரதேச மக்கள் கூறினார்கள்.

இதேவேளை -

அச்செழுவைச் சேர்ந்த மகேந்திரன் ஜெயந்தினி (வயது 21) என்ற இளம் பெண் அச்செழுவில் உள்ள உறவினர் வீட்டில் வசித்து வந்தார். அவரை ஒருவார காலமாகக் காணவில்லை என அவரது உறவினர்கள் சில தினங்களுக்கு முன்னர் சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர்.

மீட்கப்பட்ட எலும்புக்கூடு பிரஸ்தாப பெண்ணினுடையதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (1-25-86-72)

# செய்முறைப் பரீட்சை பரீட்சகர்கள் தெரிவாவர்

யாழ்ப்பாணம், செப். 01

ஜீ. சி. ஈ உயர்தரப் பரீட்சையில் மனையியல், விஞ்ஞானம், நடனம், சங்கீதம் ஆகிய பாடங்களுக்கான செய்முறைப் பரீட்சைக்கு பரீட்சகர்களை தெரிவு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பிக்க விரும்புவோர் யாழ். வலயக் கல்வி அலுவலகத்தில் விண்ணப்பப்படிவத்தினைப் பெற்று பூர்த்தி செய்து பரீட்சை ஆணையாளர் நாயகம் பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், தேசிய மதிப்பீட்டிற்கும், பரீட்சித்தலுக்கு மான சேவை, பெலவத்த, பத்திரமுல்ல எனும் முகவரிக்கு எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (06)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப். 01

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் ஆசிரியர்களினதும்,கல்விசாரா ஊழியர்களினதும் தகவல்களைப் பெறுவதற்கான அவசர சந்திப்பொன்று நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலையில் நடைபெறவுள்ளதால் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கல்லூரி அதிபர் கேட்டுள்ளார். (6)

# மின்கம்பத்துடன் மோதி இளைஞன் காயம்

யாழ்ப்பாணம், செப். 01

கரவெட்டியில் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞன் மின்கம்பத்துடன் மோதுண்டு படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் மாலுசந்திக்கருகில் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

கலட்டி, சீனியர் லேனைச் சேர்ந்த என். சசிகுமார் (வயது-30) என்பவரே காயமடைந்தவராவார். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திஸநாயகத்துக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடக அமைப்பினால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும். இது அவரின் ஊடகப் பணிக்குக் கிடைக்கப் பெறுகின்ற மிகப் பெரிய கௌரவமாகும் என்றும் அந்த ஊடக அமைப்பு அறிவித்துள்ளது.

இதேநேரம் ஊடகவியலாளர் திஸநாயகத்திற்கு விதிக்கப்பட்டிருக்கும் 20 வருட கடூழிய சிறைத்தண்டனை இலங்கையில் நீதியும், நீதி நிர்வாகமும் இறந்துவிட்டன என்பதையே வெளிப்படுத்திக்காட்டுகின்றது என்று ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்ட கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதியுடன்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திக்கவேண்டும் என ஜனாதிபதி ஏற்கனவே விடுத்திருந்த வேண்டுகோளுக்கு அமைவாகவே இந்த சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான இலங்கை அரசின் உத்தேச திட்டத்தை மேலும் கால தாமதப்படுத்தாமல் உடனடியாக முன்வைக்குமாறு இச்சந்திப்பின் போது கூட்டமைப்பினர் வலியுறுத்துவர் என அறியப்படுகின்றது.

இடம்பெயர்ந்த மக்களை விரைந்து மீள்குடியேற்றம் செய்யவேண்டிய அவசியம் குறித்தும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இச்சந்திப்பின் போது வற்புறுத்துவர் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

சந்திப்பின்போது மேலும் பேச வேண்டிய விடயங்கள் குறித்து கூட்டமைப்பின் நாடாளுமன்றக்குழு இந்த வாரம் கூடி ஆராயும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(அ-சி)

**PERSONAL CLASSES**

வீடுகளில் வந்து ஆங்கிலம், கணிதம் கற்பிக்கப்படும்.
(மாநகர சபை எல்லைக்குள்)
T.P 077 1930298

## ஊடகவியலாளர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று குற்றச்சாட்டுகள் தொடர்பிலும் அவரைக் குற்றவாளியாகக் கண்ட நீதிபதி ஒவ்வொரு குற்றத்துக்கும் முறையே ஐந்து, ஐந்து, பத்து ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்தார்.

'நோர்த் ஈஸ்டன்' சஞ்சிகையில் 2000 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதிக்கும் 2007 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் அவர் வரைந்த கட்டுரைக்களுக்காகவே இத் தண்டனை அவருக்கு விதிக்கப்பட்டது.

கடந்த வருடம் மார்ச் மாதம் 6 ஆம் திகதி திஸநாயகம் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார். 'நோர்த் ஈஸ்டன்' சஞ்சிகையை வெளியிட்ட அச்சக உரிமையாளர் என்.யசீகரன் மற்றும் அவரது மனைவி பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட நிலையில் அவர்களைப் பார்வையிட பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற போதே திஸநாயகம் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டார்.

பலமாத காலமாக பொலிஸ் தலைமையகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த திஸநாயகம் பின்னர் கொழும்பு உயர்நீதிமன்றத் தீர்ப்பொன்றை அடுத்து கடந்த மே மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் கொழும்பு சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டு அங்கு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரணசிங்க என்பவருக்கு அவர் வழங்கினார் எனக் கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயேச்சையாக வழங்கப்பட்டதென கொழும்பு மேல்நீதிமன்றம் ஏற்கனவே தீர்மானித்து அதனை அடிப்படையாகக் கொண்டு திஸநாயகத்துக்கு எதிரான வழக்கை விசாரணை செய்தது என்பது தெரிந்ததே.

திஸநாயகம் சார்பாக ஆஜரான சட்டத்தரணி அனில் டி சில்வா நீதிமன்றில் கருத்து தெரிவிக்கையில், திஸநாயகம் ஓர் இனவாதி அல்லர் என்றும் சிங்கள மக்களுக்கு ஆதரவான வகையில் பல்வேறு போராட்டங்களுக்கு அவர் தலைமை வகித்துள்ளார் என்றும் சுட்டிக்காட்டினார்.

அரசமைப்பில் கருத்து வெளியிடும் சுதந்திரம் மட்டுமல்லாமல் இன, மத ரீதியின்றியும் பாரபட்சமின்றியும் நியாயமான தொரு வழக்கு விசாரணைக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளபோதிலும், அவருக்கு எதிரான வழக்கில் இந்த நியாயம் கிட்டியதா என்பது ஒரு கேள்விக்குறியான விடயம் என்றும் சட்டத்தரணி அனில் டி சில்வா நீதிமன்றத்தில் வெளிப்படையாகத் தெரிவித்தார்.

இவ்வழக்கின் தீர்ப்பை அவதானிக்கப் பெருந்திரளான பத்திரிகையாளர்கள் மற்றும் வெளிநாட்டுத் தூதரக உத்தியோகத்தர்கள் கொழும்பு மேல்நீதிமன்றத்துக்கு சமுகமளித்திருந்தனர். (அ-சி)

## லிபியாவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் லிபியாவின் வேலைவாய்ப்பு சந்தை தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்படவுள்ளது.

லிபிய புரட்சி ஏற்படுத்தப்பட்டு 40 வருட பூர்த்தியை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தேசிய வைபவத்திலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொள்வார். (சி)

## அகதிமுகாம்களில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று அறியப்படுகின்றது.

நலன்புரி நிலையங்களில் பெரும் எண்ணிக்கையான விடுதலைப் புலிகள் இருக்கலாம். தற்கொலைப் போராளிகள் மற்றும் புலனாய்வுப் பிரிவினர் பொதுமக்கள் மத்தியில் மறைந்திருக்கலாம் எனத் தன்னை இனம் காட்ட விரும்பாதஅதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

இராணுவத்தினராலோஅல்லது பொலிஸாராலோ முகாம்களைத் திறம்பட நிர்வகிக்க முடியவில்லை. மக்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் அவர்களால் விடுதலைப் புலி உறுப்பினர்களை இனங்காண முடியவில்லை என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

முகாமொன்றில் சிறிய எண்ணிக்கையானவர்களைத் தங்க வைப்பதன் மூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

மேலதிக முகாம்களை அமைப்பது அரசுக்கு சுமையான விடயமாக விளங்கலாம்.எனினும் பொது மக்கள் மத்தியில் மறைந்திருக்கும் விடுதலைப் புலிகளை இனங் காண இது உதவியாக அமையும் என்றும் அந்த அதிகாரி கூறியுள்ளார்.

## பிள்ளையானின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார் வானைநோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அதனை அடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கட்சி அலுவலகத்தை நோக்கி கற்களை வீசினர் என்றும் தெரியவருகிறது.

அக்கரைப்பற்று, சின்ன முகத்துவாரம் பிரதான வீதியிலிருந்து நேற்றுக்காலை 10 மணிக்கு ஊர்வலமாகச் சென்றவர்கள் ரி.எம்.வி.பி. அலுவலகத்துக்கு முன்பாக நின்று ஆர்ப்பாட்டம் செய்தனர்.

மாதர் சங்கத்தினர், வேலையற்ற பட்டதாரிகள், விதவைகள் உட்பட சில அமைப்புகள் இணைந்து நடத்திய இந்த ஆர்ப்பாட்டத்தில் ஐயாயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

அக்கரைப்பற்றில் அமைக்கப்பட்ட ரி.எம்.வி.பி. கட்சியினரின் அலுவலகத்தை அகற்றுமாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களின் கையொப்பங்கள் பெறப்பட்ட மகஜர் ஒன்று அக்கரைப்பற்று பொலிஸ் தலைமைப் பொறுப்பதிகாரியிடம் வழங்கப்பட்டது.

அந்த மகஜர் தொடர்பான முடிவை மூன்று தினங்களுக்குள் தெரிவிப்பதாகப் பொறுப் பதிகாரி தெரிவித்தார்.

மூன்று நாள்களில் முடிவு அறிவிக்கப்படாவிட்டால் மீண்டும் மக்கள் போராட்டம் தொடரும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர். (அ-சி)

## 'சனல் 4' வீடியோ.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும், துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொள்பவர் நீளத் தலைமுடி வளர்த்திருக்கின்றார் என்றும் சுட்டிக்காட்டியுள்ள அவர், தலைமுடி வளர்ப்பது இலங்கை இராணுவ ஒழுக்கநெறிக்கு முரணானது எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும், சுடப்படுபவர்களின் தலைமுடி வெட்டப்பட்டிருந்ததை சுட்டிக்காட்டியுள்ள அவர், இவர்கள் இலங்கை இராணுவத்திலிருந்து காணாமல் போனவர்களாக இருக்கலாம் - என்றும் தெரிவித்துள்ளார். (சி)

## விடுதலைப் புலிகள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்ற விடுதலைப்புலி இயக்க உறுப்பினர்கள் தமது இயக்கத்துக்கு மீண்டும் புத்துயிர் கொடுப்பார்கள் என்றும், இலங்கையில் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என்றும் அந்த இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது.

இவை தொடர்பாக அந்த இணையத்தளத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கை இராணுவத்துடனான இறுதிக்கட்ட யுத்தத்தின்போது சுமார் 30 ஆயிரம் புலி உறுப்பினர்கள் தப்பிப் பிழைத்திருக்கின்றார்கள். அவர்கள் ஆயுதமற்ற புலிகள் ஆவர். ஆனால், மிகவும் ஒழுங்கான கட்டமைப்புக்குள் இயங்குபவர்கள். அவர்கள் தற்போது புலிகள் இயக்கத்துக்கு புத்துயிர் கொடுத்து இலங்கையில் தாக்குதல் நடவடிக்கைகளை தொடர்வதற்கு முயற்சித்து வருகின்றார்கள். இலங்கை இராணுவம் இவர்களைப் பிடிப்பதற்கு வலை விரித்துள்ளது - என்றுள்ளது. (அ-சி)

MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS
மிகப்பிந்திய தொழில்நுட்பங்கள்
உலகின் முன்னணி நிறுவனங்களின்
விளைத்திறன் மிகு கற்கை நெறிகள்
வேலைவாய்ப்பு, சம்பந்தமான விபரங்கள்
நீங்களும் அறிய வேண்டாமா?
இலவச கருத்தரங்கு,இடம்: MCS விரிவுரை மண்டபம்
பதிவுகள் 03.09.2009 இற்கு முன் நேரில்
324,Palaly Road,Campus Junction,Jaffna,Bus Root-764
Supported By UNDP/IRRP Supported By UNDP/IRRP Supported By UNDP/IRRP

PJ-CORNER IN Brilliant Informative of Information Technology
BIIT The Village Campus
ஆவரங்கால் சந்தி, ஆவரங்கால்.
கணனி கல்வியில் PJ-CORNER!
Diploma in Computerizes Accounting
Diploma in Multi Media Tech
Diploma in Vedio Editing
Diploma in Web Designing
Diploma in Hardware
Diploma in Internet Technology
Diploma in MS-Office
Diploma in Graphics Designing
Programming
ICT,GIT



துஸ்யந்தி தெய்வேந்திரன்
... Pj Corner ...



வைஸ்ணவி தங்கராஜா
A/L ... Pj Corner ...
... Pj Corner in BiiT ...

**ACCA**
YOUR FUTURE
(Association of Charted Certified Accountants)
IN FINANCE AND ACCOUNTING
க.பொ.த. (உ.த.) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான
மாபெரும் வழிகாட்டற் கருத்தரங்கு.
"ACCA கற்கைநெறியும், விசா நடைமுறைகளும்"
நிலையம்: JTI விரிவுரை மண்டபம்.
காலம்: 04.09.2009 (வெள்ளிக்கிழமை)
நேரம்: 10.00 மணி
JAFFNA TECHNICAL INSTITUTE(JTI)
No 45, Clock Tower Road,Jaffna
(பெருமாள் கோவிலுக்கு அருகாமையில்)
அலுவலக நேரம்: வார நாட்கள் - 09-12, வார இறுதி நாட்கள் - 09-01
T.P: 0777855800, 0718561654 e.mail: accajaffna@gmail.com
ACCA



இப்பொழுது உங்கள் பிரதேசத்தில்
**CIMA**
கற்கைகள் மற்றும் பரீட்சைகள்
பதிவுகள் 04th Sep. 2009 இற்கு முன்
Mobile@net Computer Services (MCS)
The only "Listed College" for CIMA course provision in Jaffna
324, Palaly Road, Jaffna.
Tel: 0212226373 Web:www.mcsitcampus.org
Hotline: 0772395895
ImperialCollege
NURTURING TOMORROW'S LEADERS
Member of ICBS Group of Companies
No. 3, St. Kilda's Lane, Colombo 03.
Tel: 0114515253 Fax: 0112501978
Web: www.icbsgroup.com
Hotline: 0773918777

THE SCIENCE CORNER
Clock Tower Lane Jaffna
2009 A/L DAY BATCH
ஆரம்பம் 02.09.2009
புதன் காலை 7.00 மணி

| உயிரியல் | பௌதிகவியல் | இணை.கணிதம் | இரசாயனவியல் |
| --- | --- | --- | --- |
| Sat, Sun : 9.00 - 10.30 | Tue, Thu 4.30 - 5.45 | Sat, Sun 9.00 - 10.30 | Tue, Thu 3.00 - 4.00 டயஸ் |
| Mon, Wed, Thu 7.00 - 8.00 | Sat, Sun 10.30 - 12.00 | Mon, Wed, Thu 7.00 - 8.00 | பௌதிகவியல் Mon, Wed, Thu 8.00 - 9.00 |
| பொன்திவாகரன் | செல்வன், செந்தில் | சிவகரன், ஐங்கரன் | செல்வன் |


## மரண அறிவித்தல்

### டேவிட் அலெக்சாண்டர் (லொயலாஸ் உரிமையாளர்)



மத்தியூஸ் வீதியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் இராஜேந்திரா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட டேவிட் அலெக்சாண்டர் கடந்த (30.08.2009) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லர் டேவிட் - டேவிட் அன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும்,றெஜினாவின் அன்புக் கணவரும் இக்னேசியஸ் லொயலா (பிரான்ஸ்), கிளன்சியஸ் லொயலா, மொறிசியஸ் லொயலா (பிரான்ஸ்), ஜெறின் அலக்சியா (பிரான்ஸ்), ஐறின், சோவியா (வர்த்தக வங்கி,யாழ்ப்பாணம்) ஆகியோரின் தகப்பனாரும், சியாமளா, கீதா (மக்கள் வங்கி, திருநெல்வேலி), திலக் ஆகியோரின் மாமனும், எறிக், எறின், றெஜிசியா, ஸ்ரெபி ஆகியோரின் பேரனும், அல்வின்,தேவு, புவனா, குமார், செல்வக்குமார் மற்றும் காலஞ்சென்றவர்களான கிறேக்கரி தங்கராஜா, ரவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

42/9,இராஜேந்திரா வீதி.
யாழ்ப்பாணம். (88413)

தகவல்:
கிளன்சியஸ் லொயலா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.09.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.